விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 040 வள்ளுவர் ஆண்டு 2056 தை 15 செவ்வாய்க்கிழமை (28.01.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## பேரவையின் தீர்மானம் வாபஸ் பெறப்பட வேண்டும்

### யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் விசேட பொதுக் குழுக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் குறித்த அறிக்கை ஒன்றை ஆசிரியர் சங்கம் வெளியிட்டுள்ளது. அதன் விபரம் வருமாறு,

13

## பொய்ச் செய்திகளை திட்டமிட்டு பரப்புகின்றனர்

### யாழ்.பல்கலைக்கழக அனைத்துப் பீட மாணவர் ஒன்றியம் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள்முன்னெடுத்த உண்ணாவிரதப் போராட்டம் அதனைத் தொடர்ந்து கலைப்பீடாதிபதி பேராசிரியர் சி.ரகுராம் தனது பதவியை இராஜினாமாச் செய்தமை, அவரின் இராஜினாமாவை

02

## கடந்த அரசால் மூடி மறைக்கப்பட்ட அனைத்துக் குற்றங்களும் முறையாக விசாரிக்கப்படும்



### ஜனாதிபதி அநுர தெரிவிப்பு

(கொழும்பு)

கடந்த அரசாங்கத்தின் காலத்தில் மூடி மறைக்கப்பட்ட அனைத்துக் குற்றங்களும் முறையாக விசாரிக்கப்படும் என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார். (15ஆம் பக்கம் பார்க்க)

## அரசியலமைப்பை அரசு மீறியுள்ளது

### உதய கம்மன்பில



(கொழும்பு)

மக்களுக்குப் பொய்யான வாக்குறுதியை வழங்கி அரசாங்கம் அரசியலமைப்பை மீறியுள்ளது என பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவரும், முன்னாள்

15

## யோஷித மீது மீண்டும் வழக்குத் தாக்கல்

### நீதி அமைச்சர் ஹர்ஷன



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மகன் யோஷித ராஜபக்ஷ மீது ஒரு மாத காலத்துக்குள் பணச்சலவைக் குற்றச்சாட்டின் கீழ்

15

## வடக்குப் பிரச்சினைகளுக்கு அநுர தீர்வு தருவார்

### அமைச்சர் பிமல் ரத்நாயக்க



(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் வடக்கு மாகாண விஜயத்தின்போது, இந்த மாகாண மக்கள் நீண்டகாலமாக எதிர்கொண்டுள்ள பல பிரச்சினை

16

## வடக்கில் இன்று முதல் மழைக்கு வாய்ப்பு

(யாழ்ப்பாணம்)

தெற்கு மற்றும் தென்கிழக்குப் பகுதியில் மேலடுக்கு சுழற்சி உருவாகியுள்ளதால் வட மாகாணத்தில் இன்று முதல் மழைக்கு வாய்ப்புள்ளது என

15

### தமிழரசுக் கட்சியின் முடிவுக்காக

## தமிழ்த் தேசியக் கட்சிகளின் கலந்துரையாடல் பிற்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தமிழரசுக் கட்சி முடிவு எடுக்காததனால் தமிழ்த் தேசியக் கட்சிகளுக் கிடையிலான கலந்துரையாடல் பிற்போடப்பட்டுள்ளது.

புதிய அரசியலமைப்பு மற்றும் இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் பாராளுமன்றத்தில் கூட்டாகச் செயற்படுவது தொடர்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில், தமிழ்த் தேசியக் கட்சிகளுடனான கலந்துரையாடல் முன்னெடுக்கப்பட இருந்தது.

அந்நிலையில் தமிழரசுக் கட்சி தமக்கு உத்தியோகபூர்வமாக

15




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறாது நின்று காக்கும் உங்கள் நாளிதழ்

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



2024 ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் எமது பாடசாலை மாணவன்

**பரமேஸ்வரன் பிரசோதன் 186 புள்ளிகள்**

பெற்று வட மாகாணத்தில் முதலாம் இடத்தையும் தேசிய ரீதியில் முதல் நிலை பெற்ற 18 மாணவர்களுள் ஒருவராகவும் தெரிவு செய்யப்பட்டு சாதனை படைத்துள்ளார். அத்துடன் இம்மாணவன் 2024 ஆம் ஆண்டு நடைபெற்ற விரைவு கணிதப் போட்டியில் மாகாண மட்டத்தில் முதலாம் இடத்தையும் தமிழ் மொழித்தின எழுத்தாக்கப் போட்டியில் மாகாண மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்று தேசிய மட்டப் போட்டியில் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இவரை எமது பாடசாலைச் சமூகம் சார்பாக வாழ்த்துவதில் பெருமை கொள்கின்றோம். மேலும் இவருடன் சேர்ந்து எமது பாடசாலையில் சித்தியடைந்த **134 மாணவர்களையும்** பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(C-2144)

**வாழ்த்துவோர் : பாடசாலைச் சமூகம்**
**யாழ். இந்து ஆரம்ப பாடசாலை**

# மரண அறிவித்தல்



## திருமதி துரைச்சாமி சரஸ்வதி

மூளாயைப் பிறப்பிடமாகவும் கொடிகாம வீதி, இணவொல்லை, மந்திகையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி துரைச்சாமி சரஸ்வதி அவர்கள் 26.01.2025 ஞாயிற்றுக்கிழமை இவ்வுலக வாழ்வை நீத்து இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா - நேசமணி இணையர்களின் பாசமிகு மகளும் காலஞ்சென்ற துரைச்சாமி அவர்களின் அன்பு மனைவியும் சறோஜாதேவி, கோமகன், கஜேந்திரன், கிரியாசக்தி, ஜெயசக்தி, காலஞ்சென்ற ஞானசக்தி ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 28.01.2025 இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் கொடிகாமவீதி, இணவொல்லை மந்திகையில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று புகழுடல் தகனக் கிரியைக்காக பி.ப 4.00 மணியளவில் கியான்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

கொடிகாம வீதி,
இணவொல்லை,
மந்திகை.

(C-2143)

*தகவல் :*
குடும்பத்தினர்
076 233 8557

## பொய்ச்...

ஏற்கக் கூடாது என கலைப்பீட மாணவர் ஒன்றியம் விடுத்த அறிக்கை மற்றும் அவை தொடர்பில் யாழ்.பல்கலைக்கழகப் பேரவை எடுத்த முடிவுகள் என்பதாக யாழ்.பல்கலைக் கழக சமகால நிலைமை சர்ச்சைக்குரியதாக மாறியுள்ளது.

இந்நிலையில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மாணவர்களால் முன்னெடுக்கப்பட்ட உண்ணாவிரதப் போராட்டம் தொடர்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அனைத்துப்பீட மாணவர் ஒன்றியங்கள் இணைந்து கூட்டு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளன.

முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடம், மருத்துவபீடம், இணைந்த சுகாதாரக் கற்கைகள் பீடம், தொழில்நுட்பப் பீடம், விஞ்ஞான பீடம், விவசாய பீடம், இந்துக்கற்கைகள் பீடம், சித்த மருத்துவ பீடம் ஆகியவற்றின் மாணவர் ஒன்றியத்தின் தலைவர்கள் ஒப்பமிட்டு கூட்டாக வெளியிட்ட அறிக்கை வருமாறு,

எமது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களினால் கடந்த 24, 25 ஆம் திகதிகளில் நடைபெற்ற உண்ணாவிரதப் போராட்டமானது நான்கு அம்சக் கோரிக்கைகளினை முன்வைத்து நடைபெற்றிருந்தது. தற்பொழுது ஒரு சில நிர்வாக மற்றும் அரசியல் நோக்கங்களிற்காக அது முழுமையாக திரிபுபடுத்தப்பட்டு போராட்டத்தின் நோக்கம் முழுமையாக திசை மாற்றம் செய்யப்பட்டு வருகின்றது. போராட்டத்தின் நோக்கத்தினையும் சரியான புரிதலையும் வழங்கும் நோக்கத்துடன் இந்த ஊடக அறிக்கையினை வெளியிடுகின்றோம்.

குறித்த உண்ணாவிரதப் போராட்டமானது பின்வரும் நான்கு அம்சக் கோரிக்கைகளினை முன்வைத்து நடைபெற்றிருந்தது. விதிகளிற்குப் புறம்பாக நடைபெறும்/ நடைபெற்ற மாணவர்கள் மீதான விசாரணைகளை உடன் நிறுத்துதல், போராடுதல் மற்றும் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம் உள்ளிட்ட மாணவர்களின் அடிப்படை உரிமைகளை உறுதி செய்தல், விரிவுரையாளர்கள் மீதான முறைகேடுகளையும் பாரபட்சமின்றி விசாரணை செய்தல், மாணவர்களின் கற்றலிற்கான சுதந்திரத்தை உறுதி செய்து மாணவர்களிற்கு உடனடி நிவாரணம் வழங்குதல்.

எமது பல்கலை மாணவர்கள் மீது விதிக்கப்பட்ட வகுப்புத்தடைகள் விதிமீறல்களுடனும் உரிய கால நீடிப்புக்களுடனும் நடைபெறவில்லை என்று 25.01.2025 அன்று நடைபெற்ற பல்கலைக்கழகப் பேரவைக் கூட்டத்தில் கண்டறியப்பட்டுள்ளது. கல்லாசனங்கள் அகற்றப்பட்ட விடயத்தில் கூட எவ்வித நிர்வாக நடைமுறைகள் பின்பற்றப்படாமலும், ஒப்புதல்கள் பெறப்படாமலும் பொதுச் சொத்தொன்று உடைத்துத் தகர்க்கப்பட்டுள்ள குற்றம் நிகழ்த்தப்பட்டுள்ளமையினையும் பேரவையானது கண்டறிந்துள்ளமை நோக்கத்தக்கது.

மேற்படி விதிமீறல்களுடன் நடைபெற்ற விடயங்கள் குற்றமெனக் கணிக்கப்பட்ட பின்னர் நிகழ்ந்த செயல்கள் யாவும் போதைப் பொருட்களிற்கு எதிரான நடவடிக்கையின் விளைவுகளாக சித்தரித்து திரிபுபடுத்தப்படுகின்றமை வேதனையானது. முதலாம் ஆண்டு மாணவர்களின் பாடத்தெரிவுச் சிக்கலில் உள்ள பிறழ்வுகளையும், Whatsapp குழுவில் கலந்துரையாடிய மாணவனுக்கு வகுப்புத்தடை விதிக்கப்பட்டமையும் திட்டமிட்டு மடைமாற்றம் செய்யப்பட்டுள்ளது. அதிகார பீடங்கள் தங்களின் நலன்களிற்காக போராடும் வர்க்கங்களை பிரித்தாளும் வழமை யாவரும் அறிந்ததே! அவ்வாறு தான் ஒரு சில நிர்வாக ஒத்தோடிகளின் துணை கொண்டு புதிய புனைவுகள் எம்மத்தியில் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன.

மாணவர்கள் மீது நடைபெற்ற ஒழுக்காற்று விசாரணைகள் எவற்றிலும் கல்லாசனங்களோ, போதைப் பொருட்களோ நேரடியாகத் தொடர்புபடாத நிலையிலும் ஒரு விடயத்தைத் தெளிவுபடுத்துகின்றோம். மாணவர் சமூகமாக நாங்கள் ஒருபோதும் போதையை ஆதரித்ததுமில்லை, ஆதரிக்கப் போவதுமில்லை. மாறாக "காலில் புண் என்றால் காலினை வெட்டியெறிவதற்குப் பதில் அதனை ஆற்றுவதே சமூகப் பொறுப்பு". அதாவது கல்லாசனங்களால் ஏதேனும் சிக்கல் நிலை இருப்பின் அதற்கான முற்காப்பு நடவடிக்கைகளினை மேற்கொள்ளுவதும், அதனை தடுத்து நிறுத்துவதுமே மாணவர் ஒழுக்கம் சார் தரப்பினரின் கடமையும் பொறுப்புமாகும். மாறாக பொதுச் சொத்தினை தகர்ப்பது என்பது பெருந்தவறு. அதனை நியாயப்படுத்தும் விதத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் சமூகம் ஒரு நெறி பிறழ்ந்த சமூகம் எனும் காட்டிக் கொடுப்புக்கள் திட்டமிட்டு பல்கலைக்கழக மாண்பிற்கு களங்கமேற்படுத்தும் வகையில் ஒரு சில நிர்வாக ஒத்தோடிகளின் துணையுடன் அரங்கேற்றப்படுகிறமை வேதனைக்குரியது.

மாணவர்களுடைய கருத்தாக சித்தரித்து ஒரு சிலரால் முன்னெடுக்கப்பட்ட ஊடக சந்திப்பென்பது மாணவர்களுடைய கருத்தன்று! யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், ஒன்றியப் பிரதிநிதிகள், பல்கலை நிர்வாகம் ஆகியவற்றை களங்கப்படுத்தும் வகையில் ஆதாரங்களேதுமற்ற திரிபுபடுத்தப்பட்ட பொய்யான செய்திகள் பொதுவெளியில் பகிரப்பட்டு வருகின்றமையை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

பல்கலைக்கழக மாணவர்கள் மீதான பழிவாங்கல்கள் மற்றும் கற்றல் உரிமைகளிற்காக அனைவராலும் முன்னெடுக்கப்பட்ட உண்ணாவிரதப் போராட்டமானது மாணவர்களின் அடிப்படைக் கற்றல், சனநாயக உரிமை சார்ந்தே முன்னெடுக்கப்பட்டது. எனினும் அது திட்டமிட்டு திரிபுபடுத்தப்படுவதோடு, பல்கலைக்கழகத்திற்கு களங்கமேற்படுத்துவதாக அமைந்துள்ளது. பல்கலைக்கழக பேரவையினையும் துணைவேந்தரையும் திட்டமிட்டு குற்றஞ்சாட்டும் நோக்கில் இவை பரப்பப்படுகின்றமையினையும் சமூகத்தின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றோம்.(ம-7)

## யா/ மகாஜனக் கல்லூரி தெல்லிப்பழை

**தரம் - 6 அனுமதி - 2025**

எமது பாடசாலையில் தரம் - 6 இற்கான தமிழ், ஆங்கில மொழி மூல கற்றல் அனுமதிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

♦விண்ணப்ப முடிவுத் திகதி 05.02.2025

அதிபர்
யா/ மகாஜனக் கல்லூரி,
தெல்லிப்பழை.

(C-2145)

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியர்
திரு. **பீற்றர் சந்தியா** அவர்களின்
அன்புத் தாயார்

## திருமதி அன்ரனி மரியபுஸ்பம்



அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் நலன்புரிக் கழகம்**
**யா/புனித சாள்ஸ் மகா வித்தியாலயம்**
**பிரதான வீதி, யாழ்ப்பாணம்.**

(3245)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களின் தேவை அறிந்து இந்தியா எப்போதும் செயற்படும்

## யாழ்.இந்தியத் துணைத்தூதர் சாய்முரளி



(யாழ்ப்பாணம்)

**வடக்கு - கிழக்கு தமிழ் மக்களின் தேவைகளை அறிந்து செயற்படும் இந்தியா என்கின்ற சகோதரனின் கதவை எந்நேரமும் தமிழ் மக்கள் தட்டலாம் என யாழ். இந்தியத் துணைத்தூதர் சாய் முரளி தெரிவித்துள்ளார்.**

யாழ்ப்பாணம் திருவள்ளுவர் பண்பாட்டு மையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தியாவின் 76ஆவது சுதந்திரதின நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.


அவர் மேலும் தெரிவிக்கையில், இந்தியா இராஜ தந்திர உறவைத் தாண்டி, வடக்கு - கிழக்கு தமிழ் மக்களுடன் பயணித்து வரும் சகோதரனாக, மக்களின் தேவைகளை அறிந்து உதவிகளை மேற்கொண்டு வருகிறது.

யாழ். துணைத்தூதரகம் வடக்கு மக்களின் நல்ல நண்பனாகவும் சகோதரனாகவும் செயற்பட்டு வரும் நிலையில் யார் நண்பன், யார் பகைவன் என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

நாங்கள் உங்களுடன் எடுத்த தீர்மானங்கள் சிலவேளைகளில் மாறுபாடுகளை ஏற்படுத்தினாலும் தமிழ் மக்களின் உரிமை மற்றும் நலன்களில் என்றும் ஆதரவாளனாக இந்தியா செயற்படும் யாழ்ப்பாண மக்களின் அறிவாற்றலில் இந்திய மக்கள் அன்றும் இன்றும் பெருமை கொள்பவர்கள் என்பதைக் கூறிக்கொள்வதில் பெருமையடைகிறேன்.

குறித்த நிகழ்வில் கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரன், வடமாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன், அவைத் தலைவர் சீ.வி.கே.சிவஞானம், பாராளுமன்ற உறுப்பினர்களான றஜீவன், பவானந்தராஜா உட்பட அரசியல் பிரமுகர்கள் பலர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

# 1,485 மெற்றிக்தொன் உப்பு நாட்டிற்கு



(கொழும்பு)

இறக்குமதி செய்யப்பட்ட 1,485 மெற்றிக்தொன் உப்பு நாட்டிற்கு வந்துள்ளதாக அரச வர்த்தகக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

அண்மைய பருவமழை காலத்தில் உள்ளூர் உற்பத்தியாளர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் காரணமாக உள்ளூர் சந்தையில் உப்புத் தட்டுப்பாட்டைத் தீர்க்க இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதன்படி 2025 பெப்ரவரி வரை இந்தியாவில் இருந்து 30,000 மெற்றிக்தொன் உப்பினை இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவை ஒப்புதல் வழங்கியிருந்தது. (நி-8)

# யோஷித ராஜபக்சவிற்கு பிணை வெளிநாடு செல்லத் தடை



(கொழும்பு)

நிதி மோசடி தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் மகனான யோஷித ராஜபக்ச பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அவரை கொழும்பு நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்திய போதே மேலதிக நீதவான் மஞ்சுள ரத்நாயக்க இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார். அதன்படி, சந்தேக நபரை தலா 50 மில்லியன் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் விடுவிக்க உத்தரவிடப்பட்டது.

மேலும் சந்தேக நபர் வெளிநாடு செல்வதற்கு தடை விதித்த நீதிமன்றம், இது குறித்து குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளருக்கு அறிவிக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டுள்ளது.

இதன்படி சந்தேக நபரை ஒவ்வொரு மாதமும் கடைசி ஞாயிற்றுக்கிழமை காவல் துறை நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவில் முன்னிலையாகுமாறும் உத்தரவிட்ட நீதவான், சாட்சிகளுக்கு அழுத்தம் செலுத்துவதைத் தவிர்க்குமாறும் உத்தரவு பிறப்பித்தார். (நி-8)

# புதிய கூட்டணி தொடர்பில் ரணில் - சஜித் சந்திப்பு



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும், ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கும் இடையிலான விசேட அரசியல் கலந்துரையாடல் விரைவில் இடம்பெறவுள்ளதாக முன்னாள் ஆளுநர் நவீன் திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்காக ஐக்கிய தேசியக் கட்சிக்கும் ஐக்கிய மக்கள் சக்திக்கும் இடையில் கூட்டுக் கூட்டணியைக் கட்டியெழுப்பும் நோக்கில் இந்தக் கூட்டம் நடைபெறவுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது, கூட்டணியின் பெயர், போட்டியிடும் சின்னம், வேட்பாளர் பட்டியல் தயாரித்தல் உள்ளிட்ட பல அரசியல் விவகாரங்கள் குறித்தும் கவனம் செலுத்தப்படும். (நி-8)

# பொலிஸாரின் விசேட நடவடிக்கைகளால் குறைவடைந்த குற்றச்செயல்கள்


(கொழும்பு)

நாட்டில் குற்றச்செயல்களை கட்டுப்படுத்துவதற்காக ஆரம்பிக்கப்பட்ட விசேட நடவடிக்கையின் போது 12 நாட்களுக்குள் குற்றச் செயல்களுடன் நேரடியாகத் தொடர்புடைய 249 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அந்தவகையில் விசேட நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து சுமார் 4020 சந்தேக நபர்களுக்கு எதிராக பிடியாணையும் பிறப்பிக்கப்பட்டது. இந்த நடவடிக்கையின் போது 277,572 நபர்களையும் 104,844 வாகனங்களையும் பொலிஸார் சோதனையிட்டுள்ளனர்.

இந்த நடவடிக்கையானது கொள்ளைச் சம்பவங்கள் மற்றும் வீடு உடைப்புகளைத் தடுப்பதிலும் கவனம் செலுத்துவதாக தெரிவித்த பொலிஸார், விசேட நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் இவ்வாறான குற்றச்செயல்களில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர். (நி-8)

# ஆட்டோ விபத்து வெளிநாட்டவர்கள் காயம்







(கொழும்பு)

கொழும்பிலிருந்து நுவரெலியா நோக்கிச் சென்ற முச்சக்கரவண்டி விபத்துக்குள்ளானதில், அதில் பயணித்த ஐரோப்பா ஸ்லோவாக்கியா நாட்டைச் சேர்ந்த இருவர் காயமடைந்து வட்டவளை பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ் விபத்து ஹற்றன் - கொழும்பு பிரதான வீதியில் வட்டவளை குயில்வத்த பகுதியில் நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

வாடகைக்கு எடுக்கப்பட்ட முச்சக்கரவண்டியில் பயணித்த குறித்த இருவரில் ஒருவர் முச்சக்கரவண்டியை ஓட்டிச் சென்றதாக வட்டவளை பொலிஸார் தெரிவித்தனர்.

அதிகவேகத்தில் முச்சக்கர வண்டியை செலுத்தி முச்சக்கர வண்டியின் வேகத்தை கட்டுப்படுத்த முடியாமல் போனதன் காரணமாக இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

விபத்தில் காயமடைந்த ஐரோப்பா ஸ்லோவாக்கியா நாட்டைச் சேர்ந்த இருவரும் தொடர்ந்தும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும், விபத்தில் முச்சக்கரவண்டி கடும் சேதமடைந்துள்ளதாகவும் வட்டவளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சந்தன கமகே தெரிவித்தார். (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டுச் செய்திகள்

# தேசிய மட்ட பூப்பந்தாட்டம் யாழிற்கு தங்கம், வெள்ளி




தேசிய மட்ட பூப்பந்தாட்டப் போட்டியின் இரட்டையர் ஆட்டத்தில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் தங்கம் மற்றும் வெள்ளி பதக்கங்களைக் கைப்பற்றி உள்ளனர்.

தேசிய மட்ட Ranging Level- 1 பூப்பந்தாட்டப் போட்டி கடந்த 23 ஆம் திகதி தொடக்கம் 26 ஆம் திகதி வரை கிழக்கு மாகாணத்தில் நடை பெற்றது.




இதில் 40 வயதிற்கு மேற்பட்ட ஆண்களுக்கான இரட்டையர் ஆட்டத்தில் ச. காண்டீபன், கு. சற்குணசீலன் ஆகியோர் தங்கப் பதக்கத்தையும், 45வயதிற்கு மேற்பட்ட ஆண்களுக்கான இரட்டையர் ஆட்டத்தில் நா. குகதாஸ் மற்றும் வி. தயாபரன் ஆகியோர் வெள்ளிப் பதக்கத்தையும் பெற்று கொண்டனர். (6-8-90)

# அரையிறுதி வாய்ப்பினை இழந்தது இலங்கை அணி



19 வயதுக்குட்பட்ட மகளிருக்கான ரி-20 உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரின் அரையிறுதி வாய்ப்பினை இலங்கை அணி இழந்துள்ளது.

மலேசியாவின் தலைநகர் கோலாலம்பூரில் நடைபெற்றுவரும் இரண்டாவது ஐ.சி.சி 19 வயதுக்குட்பட்ட மகளிர் ரி-20 உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில் மோசமான காலநிலை காரணமாக அரையிறுதி வாய்ப்பினை இலங்கை அணி இழந்துள்ளது.

முதலாம் குழுவுக்கான சுப்பர் சிக்ஸ் போட்டி நேற்று முன்தினம் சீரற்ற காலநிலையால் இடை நிறுத்தப்பட்டு இரு அணிகளுக்கும் தலா ஒருபுள்ளிகள் வழங்கப்பட்டன.

இலங்கை தற்போது 3 புள்ளிகளுடன் 3ஆம் இடத்திலும் ஸ்கொட்லாந்து ஒரு புள்ளியுடன் 6ஆம் இடத்தில் இருக்கிறது.

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிராக கடந்த சனிக்கிழமை நடைபெற்ற சுப்பர் சிக்ஸ் போட்டியில் 7 விக்கெட்களால் அவுஸ்திரேலியா வெற்றிபெற்றது.

இந்நிலையில் நடப்புச் சம்பியனான அவுஸ்திரேலியாவும் இந்தியாவும் அரை இறுதிகளில் விளையாடுவதற்கு தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-8)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3293

சுஜீபா




சாளின்





சுரதா




டியாரா




சுதனா




மேவின்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6 கோள்களின் அணிவகுப்பை பார்வையிட முடியும்

## கொழும்பு பல்கலைக்கழகம் தெரிவிப்பு

(கொழும்பு)
சூரியக் குடும்பத்தின் 6 கோள்கள் நேராக அணி வகுக்கும் அரிதான காட்சியைப் பார்வையிட முடியுமென கொழும்பு பல்கலைக் கழகம் தெரிவித்துள்ளது.

புதன், வெள்ளி, செவ்வாய், வியாழன், சனி மற்றும் யுரேனஸ் ஆகிய கோள்களை இவ்வாறு பார்வையிட முடியுமென கொழும்பு பல்கலைக்கழகத்தின் பௌதிக வியல் பிரிவின் வானியல், விண்வெளி அறிவியல் பிரிவின் பேராசிரியர் சந்தன ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

வெள்ளி, சனி, வியாழன், செவ்வாய் ஆகிய கோள்கள் வெற்றுக்கண்களால் அவதானிக்கக் கூடியவாறு பிரகாசமாகத் தென்படும்.

நெப்டியூன், யுரேனஸ் ஆகிய கோள்களைத் தொலைநோக்கியினூடாக பார்வையிடுவதற்கும் சந்தர்ப்பங்கள் காணப்படுவதாகப் பேராசிரியர் தெரிவித்தார்.

நாளை 29ஆம் திகதி வரை சூரிய அஸ்தமனத்திற்குப் பின்னர் 90 நிமிடங்களுக்கு கோள்களை இவ்வாறு பார்வையிட முடியும் என பேராசிரியர் சந்தன ஜயரத்ன மேலும் தெரிவித்துள்ளார். (ஙி)


கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் அதிபர்
திரு. முருகையா சிறிதரன் அவர்களின்
அன்பு மாமனார்
அமரர்.
சுப்பிரமணியம் சிவானந்தன்
அவர்கள் காலமான செய்தி அறிந்து துயரடைகின்றோம். அன்னாரின் இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி சாந்தி சாந்தி
தோற்றம் 01.05.1941 மறைவு 26.01.2025 (786)
பிரிவுத்துயரில் பங்கு கொள்ளும் - ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/சன்மார்க்க மகா வித்தியாலயம்.


# தை அமாவாசை 29.01.2025 தினம் பிதிர்தோஷம் நீங்க நம் சந்ததியின் நலம் கருதி நீர் ஆடி பிதிர்க் கடன் வழிபாடு செய்வோம் ஈழத்துச் சிதம்பரம் கும்பாபிஷேகம் தரிசிப்போம்

**தொழுவார் துணையாவாள்- திருமந்திரம் 1179**
தென்னன் திருநந்தி சேவகன் தன்னொடும்
பொன்னங் கிரியில் பூதலம் போற்றிடும்
பன்னும் பரிபிடி அந்தம் பகவனோடு
உன்னும் திரிபுரை ஓதிநின் றானுக்கே.

தென்னவனாகிய சிவபெருமான், பொன்மலையாகிய கயிலாய மலையில், நந்தி காவலுடனும் உலகை எல்லாம் காத்தருளும் அருள் மிகுந்த தேவியுடன் வீற்றிருக்கிறான். உள்ளன்போடு திருவடிப்பேறு கருதி திருமுறைகள் நாளும் இடையறாது ஓதுபவர்க்கு உள்ளத்தில் வாழும் திரிபுரையாக அம்மை அருளுவாள். சிவனோடு எண்ணி வழிபடுவோம்.

விட்டுவிடப்போகுதுயிர் விட்டவுடனே உடலைச் சுட்டுவிடப்போகிறார் சுற்றத்தார்- பட்டதுபட்டெந்நேரமுஞ் சிவனையேத்துங்கள். போற்றுங்கள் என்று சொன்னேன். அதுவே சுகம்-பட்டினத்தார்.

நம் தாய், தந்தையார் உயிரானது உடலை விட்டு நீங்கிப் போனதும் எல்லோரும் நெருப்பில் எரித்து விடுவார்கள். இது நமக்கும் தான். ஆகவே எப்போதும் சிவபெருமானை வழிபடுங்கள். நம் தாய், தந்தரையது பிதிர்க்கடன் செய்து, தை அமாவாசை விரதம் இருந்து மோட்ச அர்ச்சனையும் செய்வோம்.

அன்னை வயிற்றில் அழிந்த நாள் போதாதோ? மன்னவனாய் வாழ்ந்து மரித்த நாள் போதாதா?

தாய் வயிற்றில் (வெளித் தோன்றாமல் அழிந்த நாள்) கடந்த காலம் போதாதோ, அரசனாகி வாழ்ந்து செத்த காலம் போதாதோ,

தாய், தந்தை வழிபாடும், பிதிர்க்கடன் குலதெய்வ வழிபாடும் மிகமிக முக்கிய வழிபாடாகும்.

நாளை 29.01.2025 தை அமாவாசை தினம் தாய், தந்தையரை இழந்தவர்கள் காலை நல்ல நீர்க் குளத்தில் நீராடி, எள்ளுத் தண்ணீர் இறைத்து, சிவாச்சாரியருக்கு தானம் கொடுத்து பிதிர்க்கடன் வழிபாடு செய்து, தாய்-தந்தையரின் ஆசீர்வாதம் பெற்று வாழ்வோம். திருமுறைகள், திருவாசகம் முக்கியமாக அபிராமி அந்தாதி-3100 பாடல்களும் ஓதுவோம்.

நினைமின் மனனே! நினைமின் மனனே!
சிவபெருமானைச் செம்பொனம் பலவனை
நினைமின் மனனே! நினைமின் மனனே!

முதற்சங்கம் அமுதூட்டும், மெய்குழலார் ஆசை
நடுச்சங்கம் நல்விலங்கு பூட்டும் - கடைச்சங்கம்
அம்போ தலூதும், அம்மட்டோ? இம்மட்டோ?
நாம்பூமி வாழ்ந்த நாள்!- பட்டினத்தார்.

சத்தியாவது உன்னுடல் தயங்கு சீவன் உட்சிவம்
பித்தர்காள் இதற்குமேல் பிதற்றுகின்றது இல்லையே
சுத்தி ஐந்துகூடம் ஒன்று சொல்லிறந்தோர் வெளி
சத்தி சிவமும் ஆகி நின்று தண்மையாவது உண்மையே
சித்தர்-சிவவாக்கியர்

அமாவாசைத் தினத்தில் சூரியகலை சந்திரகலை இணையும் நாளில் அதிகூடிய அருள் வழிபாட்டில் ஈழத்துச் சிதம்பரக் கும்பாபிசேகம் நடைபெற அம்பிகையை பிரார்த்திப்போம். அதுவே நம் சுகம் பாக்கியம்

(2142)



க.கு.க.சிவபாலன்
போசகர் ஈழத்துச் சிதம்பரம்,
மாணிக்கவாசகர் மடாலயம்.

# இராசிபலன்

28.01.2025
தை 15,செவ்வாய்க்கிழமை
சதுர்த்தசி முன்னிரவு 8.11 மணிவரை

பூராடம் முற்பகல் 9.22 மணிவரை
சுபநேரம் 11.06-12.36 மணிவரை
இராகுகாலம் 3.36-5.06 மணிவரை

சந்திராஷ்டமம் - திருவாதிரை

வளவன்




மேஷம்

நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, உடல் நலன் சீராகும், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், திடீர்க்கும் பயணங்கள் இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும்.



கடகம்

வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், தேக நலனில் முன்னேற்றமுண்டு, இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.




துலாம்

நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள்.




மகரம்

திட்டமிட்ட காரியங்கவில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், கடவுளை வழிபட்டு காரியங்களைச் செய்வது வெற்றி தரும், சயன சுகக் குறைவுகள் ஏற்படலாம்.




ரிஷபம்

உறவினர்களிடம் பேசும் போது நிதானம் தேவை, வழிபாட்டால் அமைதி காண வேண்டிய நாள், எடுத்த காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள்.




சிம்மம்

பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், வாழ்க்கைத்தரம் உயர வழிவகை செய்வீர்கள்.




விருச்சிகம்

சுப காரியத்திற்கு பிள்ளையார் சுழி போடுவீர்கள், வருமானம் பெருக வழியமைத்துக் கொள்வீர்கள், தன்னம்பிக்கையோடு செயற்படும் நாள், வீண்விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது.




கும்பம்

அந்நிய தேசத் தொடர்புகள் விரும்பியபடியே கைகூடும், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், பொருளாதார நிலையில் உயர்வு காணும் நாள், கௌரவமான நாள்.




மிதுனம்

முக்கிய பொறுப்புக்களை மதியத்திற்கு முன்னர் நிறைவேற்றுவது வெற்றி தரும், அலங்காரப் பொருட்களை வாங்குவதில் பிரியப்படுவீர்கள், நண்பர்கள் நம்பிக்கைக் குரியவர்களாக நடந்து கொள்வர்.




கன்னி

சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, புதிய நபர்களின் சந்திப்பால் நன்மையுண்டு, தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள்.



தனுசு

சவால்களை சமார்த்தியமாக சமாளிப்பீர்கள், எதிர்பாராத காரியமொன்று நடைபெறும் வாய்ப்புண்டு, கௌரவமான மனிதர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.



மீனம்

வங்கிச் சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும், செய்தொழிலில் ஆர்வம் கூடும், போசன சுகமுண்டு, தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.

பொறுமையை எங்கு கைவிடுகிறோமோ அங்கு பலாத்காரம் உருவெடுக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திர தினத்தை கரிநாளாக அனுஷ்டிக்க அழைப்பு

## வடக்கு-கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்கம்

(யாழ்ப்பாணம்)

**இலங்கையின் 77 ஆவது சுதந்திர தினமான பெ.4 ஆம் திகதியை கரி நாளாக நினைவுகூர்ந்து தமிழ் மக்களின் வலிகளையும் உணர்வுகளையும் சர்வதேசத்திற்கு மட்டுமல்ல, அநுர அரசுக்கும் எடுத்துக்கூறுவதற்கு அணிதிரளுமாறு, வடக்கு-கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் அழைப்பு விடுத்துள்ளனர்.**

இறுதி யுத்த காலப்பகுதியில் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்க உறுப்பினர்கள் நேற்று யாழ். ஊடக அமையத்தில் இடம் பெற்ற ஊடக சந்திப்பின்போதே இவ்வாறு அழைப்பு விடுத்தனர்.

காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளுக்கு நீதி வேண்டி, அதற்கு சர்வதேச நாடுகள் தலையிட வேண்டும் என்ற கோரிக்கையினை முன்வைத்து ஏறத்தாழ 8 ஆண்டுகளாக வாழும் உறவுகள் தொடர்ந்து போராடி வருகின்றனர்.

ஆனால் இதுவரை எதுவிதமான தீர்வுகளும் கிடைக்கப் பெறவில்லை. சுமார் 18 ஆயிரத்திற்கும் அதிகமான உறவுகள் காணாமலாக்கப்பட்டுள்ளனர். இது தொடர்பில் பல்வேறு வகையில் வடக்கு கிழக்கெங்கும் எமது சங்கம் போராட்டங்களை முன்னெடுத்து எமது வலிகளை வெளிப்படுத்தியிருந்தது.

இதே நேரம் இக்காலப் பகுதியில் நீதிவேண்டி போராட்டத்தை முன்னெடுத்த உறவுகளின் அன்னையர்கள் 300 இற்கும் அதிகமானோர் தமது அபிலாசைகளை எட்டாது இறந்துள்ளனர்.

ஆனால் தீர்வு தருகின்றோம் என்று கூறி ஆட்சிக்கு வந்த அரசுகள் ஒவ்வொன்றும் தமது இயல்பான போக்கையே தொடர்ந்தும் முன்னெடுக்கின்றன.

ஆனால் எமது மக்களுக்கு எதுவித தீர்வுகளும் நன்மைகளும் கிடைக்கவில்லை. நாட்டுக்கு சுதந்திரம் கிடைத்துள்ளதாக கூறப்படுகின்றது. ஆனால் எமது மக்களுக்கு இன்னமும் அதன் பலாபலன்கள் கிடைக்கவில்லை.

இவ்வாறான பின்னணியில் வரவுள்ள இலங்கையின் 77 ஆவது சுதந்திர நாளை கரி நாளாக அனுஷ்டிக்க அழைப்பு விடுக்கின்றோம்.

அதன்படி இந்த எதிர்ப்பு நாளை வடக்கு-கிழக்கில் முன்னெடுக்க ஏற்பாடு செய்துள்ளோம்.

மேலும் எமது இந்தப் போராட்டத்துக்கு பல்கலைக்கழகம், அரசியல் கட்சிகள், பொது அமைப்புகள், வர்த்தக சங்கங்கள், பொதுப் போக்குவரத்து மற்றும் அனைத்து தரப்பினரும் ஆதரவளிக்குமாறும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (6-8-33)

---

புலமைப்பரிசில் பரீட்சை

## சோதிவேம்படி வித்தியாசாலை யாழ். மாவட்டத்தில் முதலிடம்

(யாழ்ப்பாணம்)

2024 ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் யாழ். மாவட்டத்தில் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்ற மாணவர்களின் சதவீதத்தில் யா/மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாசாலை முதலிடம் பெற்றுள்ளது.

பரீட்சைக்குத் தோற்றிய 35 மாணவர்களில் 23பேர் வெட்டுப் புள்ளிக்கு மேல் பெற்றுள்ளனர். மேலும் வெட்டுப்புள்ளிக்கு மேல் புள்ளி பெற்ற மாண வர்களின் சதவீதம் 66 வீதமாக பதிவாகியுள்ளது.

அதேவேளை 35 மாணவர்கள் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்று சித்தியடைந்துள்ளமை குறிப் பிடத்தக்கது. (6-8)

---

## வரணி - குடத்தனை வீதியை புனரமைப்புச் செய்யுங்கள்

### மக்கள் கோரிக்கை



(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு மற்றும் தென்மராட்சியை இணைக்கும் முக்கியமான வீதியில் அதிகளவான வெள்ள நீர் தேங்கி நிற்பதால் மக்கள் போக்குவரத்துச் செய்வதில் சிரமப்படுகின்றனர்.


தென்மராட்சி வரணி மாசேரிப் பகுதியையும் வடமராட்சி கிழக்கு குடத்தனைப் பகுதியையும் இணைக்கும் இவ்வீதியானது இரு பகுதி மக்களுக்கும் பிரதான வீதியாகக் காணப்படுகின்றது.

இந்த நிலையில் மழைக் காலங்களில் குறித்த வீதியில் வெள்ள நீர் தேங்கி நிற்பதால் வியாபாரிகள், பொதுமக்கள் போக்குவரத்தில் ஈடுபடும்போது பெரிதும் சிரமப்படுகின்றனர்.

நீண்ட காலமாகப் புனரமைப்புச் செய்யப்படாது வெள்ள நீர் தேங்கிக் காணப்படும் இந்த வீதியைப் புனரமைத்து தருமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (6-8)

---

## மீனவர் விவகாரம் தொடர்பில் ரவிகரன் எம்.பியுடன் சந்திப்பு



(நெளுக்குளம்)

தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் அமைப்பாளரும் உலக மீனவ சம் மேளனத்தின் பொதுச்செயலாளர் மற்றும் தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளர் சிங்கராசா பிரதாஸ், மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் நேற்று முன்தினம் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனை சந்தித்து பேசியுள்ளனர்.

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு பகுதியில் அமைந்துள்ள பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரனை மக்கள் தொடர்பகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இச்சந்திப்பின் போதே வடபகுதி மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பிலும் அப்பிரச்சினைகளுக்கு தீர்வுகாண நடவடிக்கை மேற்கொள்வது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டுள்ளது. (6-8-[illegible])


---

**நல்லூர் இளங் கலைஞர் மன்றத்தின் புதிய கட்டடத் திறப்பு விழா கடந்த சனிக் கிழமை இளங்கலை ஞர் மன்றக் கலா மண் டபத்தில் இடம்பெற் றது.**



---

## இறந்த நிலையில் கரை ஒதுங்கிய 2 ஆமைகள்



(யாழ்ப்பாணம்)

கடற்கரைப் பகுதியில் இறந்த நிலையில் இரண்டு ஆமைகள் நேற்று கரை ஒதுங்கிய சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

பருத்தித்துறை சுப்பர் மட கடற்கரைப் பகுதியிலே இவ்வாறு கரை ஒதுங்கி உள்ளது.

அண்மைக்காலமாக குறித்த பகுதியில் இறந்த நிலையில் ஆமைகள் கரை ஒதுங்குகின்ற நிலை காணப்படுவதாக அப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (6-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சித் தேர்தலை

## ஏப்ரலில் நடத்த எதிர்பார்ப்பு

### அமைச்சர் பிமல் தெரிவிப்பு

(கொழும்பு)

**உள்ளூராட்சி சபைத் தேர்தலை இவ்வருடம் ஏப்ரலில் நடத்த அரசாங்கம் எதிர்பார்ப்பதாக அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.**

இதன்படி எதிர்வரும் ஏப்ரல் மாதம் இரண்டாவது அல்லது நான்காவது வாரத்தில் தேர்தலை நடத்துவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு நடவடிக்கை எடுக்கும் என எதிர்பார்க்கப்படுவதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கான உள்ளூராட்சி அதிகார சபைகள் தேர்தல் சட்டத்தில் திருத்தச் சட்டமூலத்தை அனைத்துக் கட்சிகளும் இணைந்து பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, உள்ளூராட்சி சபைத் தேர்தல் (திருத்த) சட்டமூலத்தை சவாலுக்கு உட்படுத்தி தாக்கல் செய்யப்பட்ட ஆட்சேபனை மனு மீதான விசாரணை உயர் நீதிமன்றத்தில் நிறைவடைந்துள்ளது.

இதுவரை பகிரங்கமாக வெளியிடப்படாத இந்த உத்தரவு பாராளுமன்ற சபாநாயகருக்கு நேரடியாகத் தெரிவிக்கப்படும் என உயர் நீதிமன்றம் அறிவித்துள்ளது.

2018 ஆம் ஆண்டு முதல் இலங்கையில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் நடைபெறவில்லை. 2022 ஆம் ஆண்டு நடைபெறவிருந்த தேர்தல் பொருளாதார நெருக்கடி காரணமாக 2023 ஆம் ஆண்டுக்கு ஒத்திவைக்கப்பட்டது. நீதிமன்றத் தீர்ப்புகளால் தேர்தல் மேலும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பாராளுமன்றத் தேர்தல்களில் அண்மையில் பெற்ற வெற்றியைத் தொடர்ந்து உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் இந்த வருடம் ஏப்ரல் மாதத்திற்கு முன்னதாக நடத்தப்படும் என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவும் சுட்டிக்காட்டியுள்ளார். (நி-8)


# நிரு ரியூசன் சென்ரர்

## ஸ்ரேசன் வீதி - கோண்டாவில்

**இணைந்த கணிதம்**
**A.பத்மநாதன்**

**A/L**
2024 மீட்டல்
2025 வகுப்புக்கள்
2026 வகுப்புக்கள்

- பௌதிகவியல் :- திரு.T.சம்பந்தன்
- இரசாயனவியல் :- திரு.S.சுரேஸ்குமார்
- உயிரியல் :- திரு.R.குகானந்தன்

**வகுப்புக்கள் ஆரம்பம் 02.02.2025**
**ஞாயிறு 4 மணி நேரஅட்டவணை மாற்றப்படும்**
**உங்கள் பதிவுகளை மேற்கொள்ள அழையுங்கள்.**

தொடர்புகளுக்கு: - நிர்வாகி -
**0777 960 138 / 076 105 6556**

(C-3238)



# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:1991- இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>உயரம்: 5' 8"<br>தகைமை/தொழில்:A/L, Sales Rep<br>எதிர்பார்ப்பு:நற்குணமுள்ள பெண்<br>தொ.இ: B/15099 | பிறப்பு:1993- இந்து<br>நட்சத்திரம்:பூனர்பூசம்<br>கி.பா:42 1/4 1 இல் செவ்<br>உயரம்: 5' 3"<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: Swiss மட்டும்<br>தொ.இ: G/14652 |
| பிறப்பு:1995-இந்து<br>நட்சத்திரம்: விசாகம் 11 இல் செவ்<br>கிபா: 47<br>உயரம்:5'8"<br>தகைமை/தொழில்: ACCA, MBA, Assistant Manager (pvt)<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி<br>தொ.இ: B/15101 | பிறப்பு-1997-இந்து<br>நட்சத்திரம்:அவிட்டம் 4 இல் செவ்<br>உயரம்: 5' 2"<br>தகைமை/தொழில் : HNDA, Accountant (PVt)<br>எதிர்பார்ப்பு:வெளிநாடு<br>தொ.இ: G/14658 |
| பிறப்பு:1988-இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா:27 1/4<br>உயரம்:6'<br>தகைமை/தொழில்: Bsc,Msc,PHD, Research Professor<br>எதிர்பார்ப்பு:IT Field, BAதவிர்ந்த ஏனைய பட்டதாரி<br>தொ.இ: B/15102 | பிறப்பு-1996- இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா:24 4 இல் செவ்<br>உயரம்:5' 1"<br>தகைமை/தொழில்:Bsc<br>எதிர்பார்ப்பு:அரச உத்தியோகம், பட்டதாரி<br>தொ.இ: G/14659 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# ஆதன உரிமை மாற்ற அறிவித்தல்

**வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை: பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகம்**
**விண்ணப்பதாரரின் பெயர் : பீற்றர் மரியகெலன் சந்திராணி**
**ஆதனப்பதிவேட்டின் படி பெயர் : இராயப்பு மரியதாஸ்**
**ஆதன இல -464 வீதி- மாதகல் வீதி, வட்டாரம் - 01**

வட்டாரம் 01 மாதகல் வீதி, ஆதன இலக்கம் **464** இல் அமைந்துள்ள உறுதியின் பிரகாரம் வடமாகாணம் யாழ்ப்பாணம் வலிகாமம் மேற்குப் பகுதி பண்டத்தரிப்பு கோவில்பற்று மாதகல் இறை **"பேத்தி வளவு"** எனும் பெயருள்ள நிலப்பரப்பு **01, 1/4** விஸ்தீரணமுள்ள இவ் ஆதனம் பிரசித்த நொத்தாரிசு **ஸ்ரனிஸ்லாஸ் செலஸ்ரின்** அவர்களால் எழுதப்பட்ட 922 ஆம் இலக்க 2021.04.29 ஆம் திகதிய உறுதி மூலம் ஸரனிஸ்லாஸ் ஜெயராஜா கைம்பெண் மேரி லூசியா புஸ்பராணி என்பவர்களால் இவ் ஆதனத்தின் உரிமையாளர்கள் தாமே என வெளிப்படுத்தல் செய்யப்பட்டு பின்னர் பிரசித்த நொத்தாரிசு **ஸ்ரனிஸ்லாஸ் செலஸ்ரின்** அவர்களால் எழுதப்பட்ட **947** ஆம் இலக்க **2021.07.19** ஆம் திகதிய உறுதி மூலம் **பீற்றர் மரியகெலன் சந்திராணி** என்பவருக்கு நிலப்பரப்பு **00 குழி 12.74** அறுதி விற்கப்பட்டுள்ளது.

**ஆதன விபரம்**

நில அளவையாளர் A.**சந்தியாப்பிள்ளை** அவர்களால் வரையப்பட்ட **1888** ஆம் இலக்க **2010.03.06** ஆம் திகதிய நிலஅளவைப்படத்தின் பிரகாரம் நிலப்பரப்பு 1 குழி 7.48 இதில் கிழக்கு பக்கமாக அறுதி விற்ற பாகம் நீக்கி மிகுதி மேற்குப்பக்கமாக துண்டு 1 எனச் சுட்டப்பட்ட நிலப்பரப்பு 00 குழி 12.74 கொண்ட இவ் ஆதனத்தின் எல்லைகள் பின்வருமாறு.

கிழக்கு - **குறித்த படத்தில் துண்டு 2 எனச்சுட்டப்பட்ட பீற்றர் மரியராணி சந்திராணியின் ஆதனம்**
வடக்கு - **பிறாஞ்சி யோசேப்புக்குரிய ஆதனம்**
மேற்கு - **சென் செபஸ்ரியான் வீதி**
தெற்கு - **பிரதான வீதி**

மேற்குறித்த ஆதனத்தை **பீற்றர் மரியகெலன் சந்திராணி** என்ற பெயரில் சபையின் ஆதனப் பதிவேடுகளில் ஆதன உரிமை மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரியின் பெயருக்கு ஆதன உரிமை மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இந்த ஆதன உரிமை மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**செயலாளர்,**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்.**

(3233)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவின் முக்கியத்துவத்தை அங்கீகரிக்கின்றோம்

## குடியரசு தின வாழ்த்தில் அமெரிக்கா தெரிவிப்பு



(வோஷிங்டன்)

இந்தியாவின் 76 ஆவது குடியரசு தின விழா நாடு முழுக்க கோலாகலமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் ஆளுநர்கள் தேசியக் கொடியை ஏற்றி வைத்தனர். மேலும் சிறப்பு அணிவகுப்புகள் மற்றும் கலை நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

இந் நிலையில் அமெரிக்கா குடியரசு தின வாழ்த்து தெரிவித்துள்ளது. இது தொடர்பாக அமெரிக்க வெளியுறவுத்துறைச் செயலர் மார்கோ ரூபியோ வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்தியா-அமெரிக்க உறவுகள் தொடர்ந்து புதிய உச்சங்களை எட்டுகிறது.

குடியரசு தினத்தைக் கொண்டாடும் இந்தியர்களுக்கு அமெரிக்கா சார்பாக வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்தியா அரசியலமைப்பை ஏற்றுக்கொண்டதை நினைவுகூரும் இந்த நாளில், உலகின் மிகப்பெரிய ஜனநாயகத்தின் அடித்தளமாக நீடித்திருக்கும் இந்தியாவின் முக்கியத்துவத்தை நாங்களும் அங்கீகரிக்கிறோம் என்று தெரிவித்துள்ளார். (நி-8)

# அமெரிக்கா-கொல

# வர்த்தகப் போ



(வோஷிங்டன்)

கொலம்பியாவில் இரு

வரும் அனைத்துப் பொரு

உடனடியாக அமுல்படுத்

வாரத்தில் 25வீத கட்டண

உயர்த்தப்படும் என்றும்

அது தவிர கொலம்பியா அரசாங்க அதிகாரிகள் மற்றும் அதன் கூட்டாளிகள் மற்றும் ஆதரவாளர்கள் மீது அமெரிக்கா பயணத் தடை மற்றும் "உடனடி விசா இரத்துகளை" விதிக்கும் என்று அவர் தெரிவித்தார்.

நாடு கடத்தப்பட்ட, புலம்பெயர்ந்தோரை ஏற்றிச் சென்ற இரண்டு அமெரிக்க இராணுவ விமானங்களை கொலம்பியாவில் தரையிறக்கக் கூடாது என்று அந்நாட்டு ஜனாதிபதி தடை விதித்ததை அடுத்து ட்ரம்பின் இந்த அறிவிப்பு வந்துள்ளது.

இதேவேளை லத்தீன் அமெரிக்காவில் மூன்றாவது பெரிய அமெரிக்க வர்த்தகப் பங்காளியான கொலம்பியா, ட்ரம்பின் இந்த அறிவிப்புக்கு விரைவாக பதிலளித்தது.

ட்ரம்பின் அறிவிப்பின் சில மணி நேரங்களுக்கு பின்னர் கொலம்பியாவின் இடதுசாரி ஜனாதிபதி குஸ்டாவோ பெட்ரோ, அமெரிக்க இறக்குமதிகள் மீதான வரிகளை 25 வீதமாக உயர்த்துமாறு வர்த்தக அமைச்சகத்திற்கு உத்தரவிட்டதாகத் தெரிவித்தார்.

"அமெரிக்காவிற்குள் நுழை

# வடக்கு காசாவுக்குள் நுழைய பாலஸ்தீனியர்களுக்கு அனுமதி

(காசா)

ஒப்பந்தப்படி, பணயக் கைதிகளில் அர்பெல் யாஹூட் என்ற பெண்ணை ஹமாஸ் விடுவிக்கவில்லை. இதனால் ஆறரை லட்சம் பாலஸ்தீனிய மக்கள் காசாவுக்கு திரும்ப காத்திருந்தனர்.

இஸ்ரேல் மற்றும் காசாவின் ஹமாஸ் அமைப்பு இடையிலான போர் 15 மாதத்துக்குப் பிறகு முடிவுக்கு வந்துள்ளது. கடந்த 2023 ஆம் ஆண்டு இஸ்ரேலுக்குள் புகுந்து ஹமாஸ் அமைப்பினர் தாக்குதல் நடத்தி 250 இற்கும் மேற்பட்டோரைப் பிணைக் கைதிகளாகப் பிடித்துச்சென்றனர்.

அதன்பின், தற்காலிகப் போர் நிறுத்தத்தின்போது 120 இற்கும் மேற்பட்ட பிணைக்கைதிகள் விடுவிக்கப்பட்டனர். ஹமாஸ் அமைப்பினரிடம் இன்னும் 94 பிணைக்கைதிகள் உள்ளனர். 34 பேர் உயிரிழந்து விட்டனர்.

கட்டார், எகிப்து, அமெரிக்கா ஆகிய நாடுகளின் மத்தியஸ்தத்தால் இருதரப்புக்கும் இடையே ஏற்பட்ட போர் நிறுத்த ஒப்பந்தம் சமீபத்தில் அமுலுக்கு வந்தது. இந்தப் போர் நிறுத்த ஒப்பந்தம் 6 வாரங்களுக்கு நடைமுறையில் இருக்கும்.

முதற்கட்டமாக 3 பெண் பிணைக்கைதிகளை ஹமாஸ் விடுதலை செய்தது. இரண்டாவது கட்டமாக 4 இளம் இஸ்ரேல் பெண் பிணைக் கைதிகளை ஹமாஸ் நேற்று முன்தினம் விடுவித்தது. அவர்களுக்கு ஈடாக 200 பாலஸ்தீனிய பிணைக்கைதிகளை இஸ்ரேல் விடுவித்துள்ளது. ஒப்பந்தப்படி பணயக் கைதிகளில் அர்பெல் யாஹூட் என்ற பெண்ணை ஹமாஸ் விடுவிக்கவில்லை.

ஒப்பந்தத்தை ஹமாஸ் மீறிவிட்டது என்றும் அர்பெல் யாஹூட் விடுதலை செய்யப்படும்வரை பாலஸ்தீனியர்கள் வடக்கு காசாவுக்கு திரும்ப அனுமதிக்கமாட்டோம் என்று இஸ்ரேல் தெரிவித்தது. இதனால் இடம்பெயர்ந்த ஆறரை லட்சம் பாலஸ்தீனிய மக்கள் வடக்கு காசா பகுதிக்கு திரும்ப வதற்கு காத்திருப்பதாக பாலஸ்தீனிய அதிகாரிகள் தெரிவித்தனர்.


ஆனால் பணயக்கைதி அர்பெல் யாஹூட் உயிருடன் இருப்பதாகவும் வரும் சனிக்கிழமை அவர் விடுதலை செய்யப்படுவார் என்றும் ஹமாஸ் தெரிவித்தது.

இந்நிலையில் இது தொடர்பாக நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு நடந்த பேச்சுவார்த்தையில் தீர்வு எட்டப்பட்டுள்ளது. அதன்படி இரண்டு கட்டமாக அர்பெல் யாஹூட் உட்பட 6 பணயக்கைதிகளை ஹமாஸ் அமைப்பு விடுதலை செய்ய முடிவு எட்டப்பட்டுள்ளது. எனவே வடக்கு காசாவுக்குள் பாலஸ்தீனியர்கள் நுழைய இஸ்ரேல் அனுமதித்துள்ளது.

இஸ்ரேலுடனான பேச்சுவார்த்தை வெற்றியடைந்ததையடுத்து, இடம்பெயர்ந்த பாலஸ்தீனியர்கள் வடக்கு காசாவுக்குத் திரும்பத் தொடங்கியுள்ளதாக காசா பகுதியில் உள்ள ஹமாஸ் உள்துறை அமைச்சகம் உறுதிப்படுத்தியுள்ளது. (நி-8)

# பிரேசில் மக்களை

# நாடு கடத்திய



(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் இரண்டாவது முறையாகப் பதவியேற்று ஒரு வார காலம் முழுமை பெறும் முன் ஏராளமான அதிரடி நடவடிக்கைகளை அவர் எடுத்துள்ளார்.

இதில் சட்டவிரோதமாக அமெரிக்காவில் குடியேறியவர்களை நாடு கடத்தும் ஜனாதிபதி ட்ரம்பின் நடவடிக்கை உலக அரசியலில் பேசு பொருளாகி இருக்கிறது.

இந்த நிலையில், அமெரிக்காவில் இருந்து நாடு கடத்தப்பட்ட பிரேசில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லம்பியா இடையே

# பார் ஆரம்பம்!

இருந்து அமெரிக்காவிற்கு
ாருட்கள் மீதும் கட்டணங்கள்
படுத்தப்படும் என்றும், ஒரு
டணங்கள் 50 வீதமாக ஆக
ும் ட்ரம்ப் தெரிவித்தார்.



வதற்கு எங்கள் மனித உழைப்பின் பலன்களுக்கு நீங்கள் 50 வீத வரி விதிக்கிறீர்கள் என்று எனக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. நானும் அதையே செய்கிறேன்" என்று பெட்ரோ ட்ரம்பை இலக்காகக் கொண்ட எக்ஸ் பதிவில் இதனைக் குறிப்பிட்டார்.

முன்னதாக நாட்டை நோக்கிச் செல்லும் புலம் பெயர்ந்தோரை ஏற்றிச் செல்லும் இரண்டு அமெரிக்க இராணுவ விமானங்களைத் தடுத்துள்ளதாக அறிவித்தார்.

மேலும் புலம்பெயர்ந்தோரை நடத்துவதில் சிறந்த நெறிமுறைகளை நிறுவுமாறு அமெரிக்காவிற்கு அழைப்பு விடுத்தார்.

புலம்பெயர்ந்த நாடு கடத்தப்பட்டவர்களுடன் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை சான் டியாகோவிலிருந்து இரண்டு இராணுவ விமானங்கள் கொலம்பியாவில் தரையிறங்கவிருந்ததாகவும் ஆனால் சிக்கல்கள் காரணமாக அந்தத் திட்டங்கள் கைவிடப்பட்டதாகவும் அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

## பெற்றோல் தாங்கி வெடித்து 18 பேர் உயிரிழப்பு

### நைஜீரியாவில் சோகம்



(நைஜர்)

நைஜீரியாவில் பெற்றோல் தாங்கி வெடித்து விபத்தில் சிக்கியது. இந்தக் கோர விபத்தில் 18 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

ஆபிரிக்க நாடான நைஜீரியாவில் உள்ள இனுகு மாகாணத்தில் நேற்று முன்தினம் மாலை பெற்றோல் ஏற்றிக்கொண்டு பெற்றோல் தாங்கி சென்றுகொண்டிருந்தது. இனுகு-ஒனிஸ்டா தேசிய நெடுஞ்சாலையில் சென்றுகொண்டிருந்தபோது சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த பெற்றோல் தாங்கி முன்னே சென்ற வாகனங்கள் மீது மோதி விபத்தில் சிக்கியது.


இந்த விபத்தில் பெற்றோல் தாங்கியிலிருந்த பெற்றோல் தீப்பற்றி வெடித்துச் சிதறியது. இந்தக் கோர விபத்தில் 18 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும், பலர் படுகாயமடைந்தனர்.

தகவலறிந்து அங்கு விரைந்து சென்ற தீயணைப்புப் படையினர் பற்றி எரிந்த தீயைப் போராடி அணைத்தனர். இதில் படுகாயம் அடைந்தவர்களை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதித்தனர். இச்சம்பவம் தொடர்பாக அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

நைஜீரியாவில் இம்மாதத் தொடக்கத்தில் பெற்றோல் ஏற்றிச்சென்ற பெற்றோல் தாங்கி வெடித்துச் சிதறி 98 பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-8)

# ள கைவிலங்குடன்

# ய அமெரிக்கா



நாட்டவர்கள் அவமதிக்கப்பட்டதாக பிரேசில் குற்றம்சாட்டியுள்ளது. நாடு கடத்தப்பட்ட பிரேசில் நாட்டவர்கள் கைவிலங்கிடப்பட்டு இருந்தனர்.

இது அவமதிப்பையும் கடந்து, மனித உரிமைகளை மீறும் செயல் என்று பிரேசில் தெரிவித்து இருக்கிறது.

அமெரிக்காவில் சட்ட விரோதமாகக் குடியேறி தங்கி வந்த பிரேசில் நாட்டைச் சேர்ந்த 88 பேர் விமானத்தில் கைவிலங்கிடப்பட்ட நிலையில் அழைத்து வரப்பட்டனர். மேலும் விமானத்தில் குளிரூட்டி இயக்கப்படவில்லை என்றும் குடிப்பதற்கு தண்ணீர் கூட வழங்கப்படவில்லை என்றும் நாடு கடத்தப்பட்டவர்களில் சிலர் குற்றம்சாட்டினர்.

மேலும் சிலர் விமானத்தினுள் அதிக வெப்பம் காரணமாக மயங்கினர் என்றும் பயணிகள் கழிவறையை பயன்படுத்தவும் அனுமதிக்கப்படவில்லை என்றும் நாடு கடத்தப்பட்ட பயணிகள் வேதனையுடன் தெரிவித்தனர்.

பயணிகளை மிக மோசமாக நடத்தியது தொடர்பாக அமெரிக்காவிடம் விளக்கம் கேட்கப்படும் என்று பிரேசில் வெளியுறவுத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. (நி-8)

## ஜோர்தானும் எகிப்தும் காசா மக்களை உள்வாங்க வேண்டும்

### அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தெரிவிப்பு

(வோஷிங்டன்)

ஜோர்தானும் எகிப்தும் மேலும் அதிகளவில் காசா மக்களை உள்வாங்க வேண்டும் என அமெரிக்க ஜனாதிபதி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

காசாவை சுத்தம் செய்ய விரும்புவதாகத் தெரிவித்துள்ள டொனால்ட் ட்ரம்ப் காசாவிலிருந்து மேலும் அதிகளவு மக்களை எகிப்தும் ஜோர்தானும் உள் வாங்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஜோர்தான் மன்னர் அப்துல்லாவுடன் இது குறித்து பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டதாகத் தெரிவித்துள்ள டொனால்ட் ட்ரம்ப் எகிப்தின் ஜனாதிபதியுடனும் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளப் போவதாக தெரிவித்துள்ளார்.

எகிப்து மேலும் அதிகளவில் காசாவிலிருந்து மக்களை உள்வாங்க வேண்டும், நாங்கள் மில்லியன் கணக்கான மக்களைப் பற்றி பேசுகின்றோம், நாங்கள் அந்த இடம் முழுவதையும் சுத்தம் செய்து [illegible] என தெரிவிக்க விரும்புகின்றோம் என குறிப்பிட்டுள்ளார்.



ஏற்கனவே அகதிகளை வெற்றிகரமாக உள்வாங்கியமைக்காக ஜோர்தான் மன்னரைப் பாராட்டுவதாக தெரிவித்துள்ள டொனால்ட் ட்ரம்ப் மேலும் அதிகளவானவர்களை ஜோர்தான் ஏற்றுக்கொள்ள வேண்டும் என நான் விரும்புகின்றேன் என தெரிவித்துள்ள ட்ரம்ப் காசா பள்ளத்தாக்கு முழுவதையும் நான் பார்க்கின்றேன் அது பெரும் குழப்பத்தில் உள்ளது எனத் தெரி வித்துள்ளார்.

காசாவில் வசிப்பவர் களை தற்காலிகமாக அல்லது நீண்ட காலத்திற்கு அங்கிருந்து வெளியேற்ற முடியும் என ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

காசா தற்போது முற்றாக இடிக்கப்பட்ட ஒருபகுதியாக காணப்படுகின்றது. கிட்டத்தட்ட அனைத்தும் இடிக்கப்பட்டு மக்கள் அங்கே இறந்து கொண்டிருக்கின்றனர். அராபிய நாடுகளுடன் இணைந்து வெவ்வேறு பகுதிகளில் அவர்களிற்கு வீடுகளை அமைப்பதற்கு நான் முயற்சிப்பேன் என ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி யின் இந்தக் கருத்தை பாலஸ்தீன ஜிகாத் அமைப்பு கண்டித்துள்ளது. இது யுத்தக் குற்றவாளிகளை ஊக்குவிக்கும் நடவடிக்கை என அந்த அமைப்பு தெரிவித்துள்ளது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்னார் சாந்திபுரம் பகுதியில்

# தீக்கிரையான வீடு



(மன்னார்)

மன்னார் சாந்திபுரம் பகுதியில் நேற்றுக் காலை தீப் பரவல் காரணமாக வீடொன்று முற்றாக எரிந்து தீக்கிரையான சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

சாந்திபுரம் சிறுவர் பூங்காவிற்குப் பின் பகுதியில் உள்ள குடிசை வீடொன்றில் திடீர் எனத் தீப் பரவல் ஏற்பட்ட நிலையில் அதனை அவதானித்த மக்கள் விரைவாக செயற்பட்டதனால் தீப்பரவல் அருகில் உள்ள வீடுகளுக்குப் பரவ முன்னதாக அணைக்கப்பட்டது.

இதையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த மன்னார் நகர சபையின் தீயணைப்பு பிரிவின் வாகனத்தின் உதவியுடன் தீப்பரவல் கட்டுப்பாட்டுக்குள்கொண்டு வரப்பட்டது.

மேலும் இதன்போது குறித்த தீப்பரவல் காரணமாக எந்த ஒரு உயிர்ச்சேதமும் ஏற்படவில்லை என்பதுடன் உடைமைகள் அனைத்தும் தீயில் எரிந்து நாசமாகியதுடன் மக்கள் ஒன்றிணைந்து செயற்பட்டதன் அடிப்படையில் பெரும் தீ விபத்தானது தவிர்க்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (6-8-285)



## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 420 | 400 | 400 | 500 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 150 | 160 |
| பச்சைமிளகாய் | 1200 | 1000 | 800 | 900 |
| தக்காளி | 350 | 400 | 350 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 240 | 250 | 200 | 200 |
| கோவா | 300 | 300 | 250 | 150 |
| கரட் | 250 | 380 | 350 | 350 |
| பூசணி | 120 | 120 | 120 | 80 |
| புடோல் | 150 | 150 | 120 | 100 |
| வாழைக்காய் | 150 | 140 | 150 | 100-130 |
| சின்ன வெங்காயம் | 400 | 280 | 350 | 200-400 |
| பெரிய வெங்காயம் | 280 | 250 | 250 | 220 |
| பாகற்காய் | 600 | 400 | 400 | 600 |
| வெண்டக்காய் | 200 | 450 | 300 | 300 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 120 | 100 |
| பயற்றங்காய் | 600 | 600 | 700 | 900 |
| லீக்ஸ் | 350 | 220 | 300 | 280 |
| பீற்றூட் | 600 | 420 | 400 | 300 |
| கறிமிளகாய் | 1400 | 700 | 600 | 650 |
| முருங்கைக்காய் | -- | 3000 | 2000 | 1500 |
| போஞ்சி | 400 | 400 | 400 | 400 |
| கத்தரிதம்புள்ள | 350 | 300 | 400 | 350 |
| கீரை - 1 பிடி | 120 | 100 | 120 | 50-60 |
| தேசிக்காய் | 300 | 250 | 250 | 150-200 |
| தேங்காய் (ஒன்று) | 200 | 250 | 200 | 150-230 |
| இராசவள்ளி | 500 | 600 | 400 | 500 |
| வெங்காயப்பூ | 450 | 300 | 400 | 300 |
| முள்ளங்கி | 120 | 120 | 180 | 100 |
| பொன்னாங்காணி | 100 | 60 | 120 | 100 |
| வல்லாரை | 60 | 70 | 60 | 50 |
| ஈரப்பலா | 100 | 100 | 100 | 100 |

## இன்று ஒரு தகவல் 310



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

# மனவாட்டம்

ஒரு அம்மா! அவருக்கு 35 வயது இருக்கும். குடும்பத்தில் எந்தக் கஷ்டமும் இல்லை. இருந்தாலும் காரணம் இல்லாமல் பிள்ளைகள் மேலே எரிந்து விழுவது வழக்கம். பிள்ளைகள் அழும். உடனே அவர்கள் மனதும் சங்கடப்படும்.

இன்னொரு அம்மா... நல்ல வேலையிலே இருக்கிறவர். வாரத்துக்கு ஒரு தடவையாவது தலைவலி வந்துவிடும். இவருக்கெல்லாம் உடம்பில் எந்தக் கோளாறும் இல்லை. மனது மட்டும் சரியா இருக்காது. தூக்க மாத்திரையைக் கையிலே வைத்திருப்பார்.

30-35 வயதுடைய பெண்களுக்கு சர்வ சாதாரணமாக காணப்படும் மனக்கோளாறு இது! இதற்கு பெயர் மனவாட்டம். மனமடிவு என்று சொல்லாம். இந்த நோய்க்கு அறிகுறி என்ன தெரியுமா? மனதிலே வருத்தமான உணர்வு இருக்கும்! அடிக்கடி அழலாம் போல தோன்றும்.

முன்பெல்லாம் எந்தெந்த செயலில் ஆர்வம் இருந்ததோ அதெல்லாம் குறைந்துவிடும். அல்லது சுத்தமாகவே ஆர்வமில்லாமலே போய்விடும்.

சில இளம் வயது பெண்கள் பக்கத்திலே இருக்கறவர்களிடம் கலகலப்பா பேசுவார்கள். வீட்டை அலங்கரிப்பதிலே ஆர்வம் இருக்கும்.

இப்போது அதுலே எல்லாம் ஆர்வம் இல்லாமல் போய்விட்டது. எந்த வேலை செய்தாலும் சீக்கிரம் களைப்பு அடைந்துவிடுற மாதிரி ஆகிவிடும்

நமக்கு யாருமே உதவியாக இல்லை.. நம்மை எல்லோரும் கைவிட்டது போல இருக்கும். இப்படிப்பட்ட உணர்வு எல்லாம் உண்டாகும்.

தன்னைத்தானே குறைசொல்லுவார்கள்.

நாம் தவறு செய்து விட்டோம் என்ற எண்ணம் தோன்றும். குற்றம் செய்ததாக நினைத்து கஷ்டப்படுவார்கள். பசி இருக்காது. தூக்கத்திலே தொந்தரவு இருக்கும். (மலச்சிக்கல் இருக்கும்) அடிக்கடி செத்துப்போய்விடலாம் என்ற உணர்வு உண்டாகும். சிலபேர் தற்கொலை முயற்சியிலே கூட ஈடுபடுவார்கள். சில பேருக்கு பலவிதமான உடல் வலிகள் இருக்கும். பலவீனம் இருக்கும். சீக்கிரமாக களைப்படைந்து விடுவார்கள். இதெல்லாம் மனவாட்ட நோய்க்கான தன்மைகள். இந்த மனவாட்டம் - அதாவது டிப்ரெசனை இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

ஒன்று தானா உண்டாகுவது. இன்னொன்று எதிர்விளைவை உண்டு செய்வது அல்லது நரம்பு சம்பந்தப்பட்ட டிப்ரெசன்.

தானாக உண்டாகும் மனவாட்ட நோய் இருக்கிறதே பாருங்கள். அதற்கு ஏதாவது சூழ்நிலை காரணமாக இருக்கலாம் அல்லது இல்லாமலும் போகலாம்.மூளையிலே Dopamine அல்லது Serotomin இதனுடைய அளவு குறையும் போது இந்த டிப்ரெசன் உண்டாகிறது. இதற்கு ஓரளவு பிறவிக் காரணங்கள் கூட இருக்கலாம். குடும்பத்திலே வேறு சிலருக்கும் வரலாம்.

பாதிக்கப்பட்ட பெண்ணைப் பார்ப்பதற்குப் பலவீனமாகத் தெரியும். கடுமையான குற்ற உணர்வு இருக்கும். தனியாக இருப்பதற்கு ஆசைப் படுவார்கள். நடுரராத்திரியில் எழுந்து உட்கார்ந்து கஷ்டப்படுவார்கள். கொடூரமான முறையிலே தற்கொலை செய்ய முயற்சி எடுப்பார்கள். தீயை வைத்திருப்பது. அமிலத்தைக் குடிப்பது தூக்கிலே தொங்குவது இப்படி . தானாக வரவழைக்கிற மனவாட்ட நோய். வந்து மறையக்கூடிய நோய். ஒரு தடவை வந்தால் மூன்றிலிருந்து 6 மாதம் வரை நீடிக்கும். இடைப்பட்ட காலங்களில் நோயாளி இயல்பாக இருப்பார்.

எதிர் விளைவை உண்டு செய்யும் அல்லது நரம்பு சம்பந்தப்பட்ட மனவாட்ட நோய் எப்படியென்றால்கணவன் - மனைவி மாமியார் மருமகள் இப்படிப்பட்ட உறவுமுறை பிரச்சினைகள். தோல்விகள், எரிச்சல்கள், வேலைத்தள பிரச்சினை. இப்படிப்பட்ட சூழ்நிலைகளினால் உண்டாகும்.

எல்லாவற்றிற்கும் மருந்து இருக்கும், மார்க்கம் இருக்கும் கவலைப்பட வேண்டியதில்லை. தைரியமாக இருக்கலாம். உளவியல் மருத்துவம் இதற்கு மிகவும் உபயோகமாக இருக்கும். சில பெண்களைப் பாருங்கள். அவர்கள் எதற்கும் அலட்டுவதில்லை.

ஒரு அம்மா அப்படித்தான் தன் கணவனை அழைத்துக்கொண்டு ஒரு மனநோய் மருந்துவரிடம் வந்தார்.

வைத்தியர் எங்கள் வீட்டுக்காரர் திடீரென்று ஒரு மாதிரியாக ஆகிவிட்டார். வித்தியாசமாக நடக்கிறார். எப்படி என்றால் இவர் தன்னையே ஒரு ஒட்டடைக் குச்சியாக நினைக்கிறார். அப்படி நினைத்துவிட்டு தன் தலையாலேயே வீட்டில் உள்ள ஒட்டடையெல்லாம் துடைத்துக் கொண்டு இருக்கிறார் என்றார்.

எவ்வளவு நாளாக இப்படி இருக்கிறது என்று கேட்டார் வைத்தியர்.


ஒரு வாரமாக இப்படி இருக்கிறது என்றார் அந்த அம்மா. அப்படி என்றால் ஏன் முன்பே அழைத்துக் கொண்டு வரவில்லை என்று கேட்டார் வைத்தியர்.

வீடு முழுவதும் சுத்தமாகட்டும் என்று காத்திருந்தேன் வைத்தியர் என்றார் அந்த அம்மா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆக்கிரமிப்பில் உள்ள காணி விபரங்களை வழங்குங்கள்

## திலகநாதன் எம்.பி கோரிக்கை



(குருமன்காடு)

இராணுவம் மற்றும் கடற்படையின் ஆக்கிரமிப்பில் உள்ள பொதுமக்களின் காணி விபரங்களை எம்மிடம் ஒப்படைத்தால் அவற்றை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் செ. திலகநாதன் தெரிவித்தார்.

வவுனியாவில் ஒருங்கிணைப்பு அலுவலகம் நேற்று திறந்து வைக்கப்பட்டதன் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது இவ்வாறு தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், கடந்த காலத்தில் இராணுவத்தினர் தமது தேவைக்காக வன்னிப் பிரதேசத்தில் கையகப்படுத்திய பிரதேசங்களைப் படிப்படியாக எமது அரசாங்கம் விடுவித்து வருகின்றது. கடந்த காலங்களிலும் இவ்வாறான காணிகளை எமது அரசாங்கம் விடுவித்து இருந்தது.

கடந்த வாரமும் இராணுவம் மற்றும் கடற்படையால் ஆக்கிரமிக்கப்பட்ட இடங்கள் தொடர்பான விபரங்களை சேகரித்து இருந்தது. எனவே அவ்வாறு கையகப்படுத்தப்பட்ட இடங்கள் இருக்குமாக இருந்தால் அது தொடர்பான விபரங்களை எமக்குத் தந்து உதவுமாறு பொதுமக்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

அவ்வாறான இடங்களை மிக விரைவில் விடுவித்து மக்களுடைய பாவனைக்கு வழங்குவதற்கான நடவடிக்கையை எடுக்க உள்ளோம் எனத் தெரிவித்தார்.(6-8-250)

# வவுனியாவில் ஒருங்கிணைப்புக் குழு அலுவலகம் திறந்து வைப்பு



(வவுனியா)

வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு அலுவலகம் நேற்று பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்கவினால் திறந்து வைக்கப்பட்டது.

வவுனியா மன்னார் வீதியில் வவுனியா தெற்கு பிரதேச செயலக வளாகத்தில் அமைந்துள்ள கட்டடத்திலேயே குறித்த ஒருங்கிணைப்புக்குழு அலுவலகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற நாட்கள் தவிர்ந்த ஏனைய தினங்களில் மக்கள் தங்களுடைய தேவைகளை நிறைவேற்றும் வகையில் இவ் அலுவலகத்தில் ஒழுங்கமைப்பு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் வன்னி பாராளுமன்ற உறுப்பினர்களான ம.ஜெகதீஸ்வரன், திலகநாதன் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர். (6-8)

# பாடசாலை காணி தொடர்பில் உரிய தீர்வு கிடைக்காவிடின்

## மீண்டும் போராட்டம் தொடரும்



(நெளுக்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட பூதன்வயல் கிராமத்தில் தண்ணிமுறிப்பு அ.த.க பாடசாலை இயங்கிய காணியை தனியார் ஒருவர் அடாத்தாகப் பிடித்து வைத்திருப்பதால் குறித்த காணியை மீட்டுத்தரக்கோரி நேற்றுக் காலை கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று இடம் பெற்றது.

குறித்த போராட்டத்தில் ஒடுக்கப்பட்ட சமுதாயத்தின் உரிமை குரல், சட்டம் எம்மை கைவிட்டு விட்டதா? பக்கச்சார்பற்ற தீர்வை தாருங்கள், கல்வி என்பது சம உரிமை அவை எமக்கு மட்டும் கிடைக்காதது ஏன்? திறமை உள்ள எமது கல்வியை தட்டிப்பறிக்காதீர்கள்! போன்ற பல்வேறு பதாதைகளை தாங்கியவாறு தற்காலிக கொட்டகை அமைத்து போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

சம்பவ இடத்திற்கு விரைந்த கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தின் உதவி பிரதேச செயலாளர், பிரதேச செயலக காணி உத்தியோகத்தர், அப்பகுதி கிராம சேவையாளர், முள்ளியவளை பொலிஸார் ஆகியோர் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் கலந்துரையாடி இதற்கான தீர்வினை வெகுவிரைவில் பெற்றுத்தருவதாகவும், தற்காலிக பாடசாலை நடைபெறும் இடத்திற்கான அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றித் தருவதாகவும் கூறியதையடுத்து போராட்டத்தை கைவிட்ட மக்கள், தங்களின் கோரிக்கைகளடங்கிய மகஜர் ஒன்றையும் உதவி பிரதேச செயலாளரிடம் கையளித்தனர்.

போராட்டம் தொடர்பில் போராட்டக்காரர்கள் கருத்து தெரிவிக்கையில், எதிர்வரும் ஏப்ரல் மாதம் 19 ஆம் திகதி கிளிநொச்சி உயர் நீதிமன்றத்தில் இது தொடர்பான வழக்கு விசாரணைகள் இடம்பெறவுள்ளதாகவும் பாடசாலைக் காணிக்கான சாதகமான பதில் கிடைக்காதுவிடின் பிள்ளைகளது கற்பித்தல் செயற்பாட்டினை இடைநிறுத்தி எமது பிள்ளைகளுடன் இவ்விடத்தில் தீர்வு கிடைக்கும் வரை மீண்டும் போராட்டம் தொடரும் எனத் தெரிவித்து போராட்டம் தற்காலிகமாக நிறைவு பெற்றிருந்தது. (6-8-299)

# புகைப்பிடிக்கும் பெண்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

(கொழும்பு)

ஆண்களுடன் ஒப்பிடுகையில் புகைப்பிடிக்கும் பெண்களின் சதவீதம் அதிகரித்து வருவதாக வைத்திய நிபுணர் சமன் இத்தகொட தெரிவித்துள்ளார்.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

10 வருடங்களுக்கு முன்னர் புகைப்பிடிக்கும் பழக்கத்தைக் கொண்டிருந்த ஆண்களின் எண்ணிக்கையைக் காட்டிலும் தற்போது புகைப்பிடிக்கும் ஆண்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

எனினும் கடந்த 10 வருடங்களுக்கு முன்னர் புகைப்பிடிக்கும் பழக்கத்தைக் கொண்டிருந்த பெண்களின் எண்ணிக்கையைக் காட்டிலும் தற்சமயம் புகைப்பிடிக்கும் பழக்கத்தைக் கொண்டிருக்கும் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. (நி-8)

# இரணைதீவில் கைதான 33 மீனவர்களும் விளக்கமறியலில்

(கண்டாவளை)

கிளிநொச்சி இரணைதீவுக்கு அண்மித்த கடற்பகுதியில் மூன்று படகுகளுடன் கைது செய்யப்பட்ட 33 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 5ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 2 மணியளவில் இரணைதீவிற்கு அண்மித்த கடற்பரப்பில் அத்துமீறிய மீன்பிடியில் ஈடுபட்ட மூன்று இந்திய இழுவைப்படகுகளையும் அதிலிருந்த 33 இந்திய மீனவர்களையும் இலங்கை கடற்படையினர் கைது செய்திருந்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட 33 இந்திய மீனவர்களும் கிளிநொச்சி மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இதனையடுத்து வழக்குப் பதிவு செய்த கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகள் நேற்று முன்தினம் இரவு கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற வாசஸ்தலத்தில் நீதிமன்ற பதில் நீதிவான் எஸ். சிவபாலசுப்பிரமணியம் முன்னிலையில் கைதானவர்களை ஆஜர் படுத்தியதையடுத்து அந்நபர்களை எதிர்வரும் 5 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (6-8-315)

# ஈழத்தமிழ்க் கலைஞர்களின்

## தேசிய மாநாடு நேற்று முன்தினம் வவுனியாவில்



(வவுனியா)

ஈழத்தமிழ்க் கலைஞர் ஒன்றியத்தின் முதலாவது தேசிய மாநாடு நேற்று முன்தினம் மாலை வவுனியாவில் நடைபெற்றது.

ஈழத்தமிழ்க் கலைகளையும் கலைஞர்களையும் சுடர் [illegible] நோக்கில் உருவாக்கம் பெற்றுள்ள ஒன்றியத்தின் ஆரம்ப விழா நேற்று முன்தினம் வவுனியாவில் உள்ள சுத்தானந்தா இந்து இளைஞர் மன்ற மண்டபத்தில் பகல் 1 மணியளவில் ஆரம்பமாகி மாலை 5 மணிவரை நடைபெற்றது.

நாடெங்கிலுமிருந்து இருநூறுக்கு மேற்பட்ட கலைஞர்கள் கலந்து கொண்ட இந்நிகழ்வில் ஒன்றியத்தின் யாப்பு நிறைவேற்றப்பட்டதோடு மத்திய மற்றும் பிராந்தியக் குழுக்கள் என்பன தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ந-7)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 690





ஊர்வலத்தில் ஒரு பல்லக்கு மட்டும் பிரிந்து முன்னால் வந்தது. மற்ற யானை, குதிரை பரிவாரங்கள் எல்லாம் சற்று பின்னால் நின்றன. முன்னால் வந்த பல்லக்கு வானதியின் அருகில் வந்ததும் பூமியில் இறக்கப்பட்டது. அதனுள் இருந்து முதன் மந்திரி அநிருத்தர் வெளியே வந்து நின்றார்.

அவர் சமிக்ஞை காட்டவே, சிவிகை சுமந்தவர்களும் காலாமுகர்களும் அப்பால் நகர்ந்து சென்றார்கள். அநிருத்தர் வானதியை மேலும் கீழும் உற்றுப் பார்த்து, "இது என்ன விந்தை! நான் காண்பது கனவு அல்லவே? என் முன்னால் நிற்பது கொடும்பாளூர் இளவரசி தானே! ஈழத்துப் போரில் வீரசொர்க்கம் எய்திய பராந்தகன் சிறிய வேளாரின் செல்வப் புதல்வி வானதிதானே?" என்று கேட்டார்.

"ஆம், ஐயா! நான் காண்பதும் கனவு அல்லவே? என் முன்னால் நிற்பது சோழ சாம்ராஜ்ய மக்களின் பயபக்தி, மரியாதைக்குரிய அன்பில் அநிருத்தப் பிரம்மராயர்தானே? சக்கரவர்த்தியின் அந்தரங்க அபிமானத்தைப் பெற்ற முதன் மந்திரியார் தானே?" என்றாள் வானதி.

தாயே! நான் யார் என்பதை நீ அறிந்திருப்பது பற்றி சந்தோஷப்படுகிறேன். இதனால் என்னுடைய வேலை எளிதாகும். உனக்கும் அதிக கஷ்டம் கொடுக்க வேண்டி ஏற்படாது."

"ஆகா! அதைப்பற்றித் தங்களுக்குக் கவலை வேண்டாம். தங்களைப் போன்ற அமைச்சர் திலகத்தினால் எனக்குக் கஷ்டம் நேர்ந்தால் அதை நான் பொருட்படுத்த மாட்டேன். அதைக் கஷ்டமாகவே கருதமாட்டேன்."

"உன் வார்த்தைகள் மேலும் எனக்குத் திருப்தி அளிக்கின்றன. உன்னை அதிகமாகக் கஷ்டப்படுத்தும் உத்தேசமும் எனக்கு இல்லை. இரண்டொரு கேள்விகள் உன்னிடம் கேட்கப் போகிறேன். அவற்றுக்கு மறுமொழி சொல்லிவிட்டால் போதும் .

ஐயா! நீங்கள் என்னைக் கேள்வி கேட்பதற்கு முன்னால் நான் கேட்பதற்குச் சில கேள்விகள் இருக்கின்றன.

"கேள், அம்மா! தயக்கமில்லாமல் கேள். நான் உன் தந்தையை போன்றவன். உன்னை என் மகளாகவே கருதுகிறேன். சில நாளைக்கு முன்பு உன் பெரிய தகப்பனார் சேநாதிபதி பூதிவிக்கிரம கேசரியை மாதோட்டத்தில் சந்தித்தேன். உன்னை என்னுடைய மகளைப் போல் பாவித்துக் கவனித்துக் கொள்ள வேண்டும் என்று சொன்னார். அப்படியே வாக்களித்தேன்."

"வந்தனம் என் தந்தையே! குழந்தைப் பிராயத்தில் தகப்பனை இழந்த எனக்குத் தந்தையாயிருப்பதாக முன்னொரு தடவை சக்கரவர்த்தி வாக்களித்தார் இப்போது தாங்கள் ஒரு தந்தை தோன்றியிருக்கிறீர்கள். இனி எனக்கு என்ன குறை?"

"நீ என்னிடம் கேட்க விரும்பியதைச் சீக்கிரம் கேள் அம்மா! வானம் கறுத்து இருள் சூழ்கிறது. மழை வரும்போலத் தோன்றுகிறது.

தந்தையே! சாலையோடு பல்லக்கில் பிரயாணம் செய்து கொண்டிருந்த தங்கள் அருமை மகளை இந்தக் காலாமுகர்களை விட்டு வழிமறித்து இவ்விடம் பலவந்தமாகக் கொண்டு சேர்க்கும்படி செய்தது தாங்கள் தானா? இந்த அபலைப் பெண்ணின் கையைத் தீவர்த்திப் பிழம்பில் காட்டி எரிக்கும்படி சொன்னதும் தாங்கள் தானா? இந்தப் பயங்கரமான மனிதர்கள் அவ்வாறு தங்கள் மீது குற்றம் சாட்டினார்கள். நான் அதை நம்பவில்லை.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## அன்பான சினேகிதனை ஆபத்தில் அறி



(நேற்றைய தொடர்ச்சி...)

கொடுத்த பணத்தைத் திருப்பிக் கேட்டதும் பாலுவுக்குக் கோபம் வந்துவிட்டது. ஆனால் கோபத்தை வெளிக்காட்டவில்லை. தருவதாகச் சொல்லி மழுப்பினான். ஆனால் அவனிடம் பணம் இருந்தது. திருப்பிக் கொடுக்க மனம் தான் இல்லை.

ஒரு நாள் பாலுவும் ராஜாவும் இரவு இரண்டாம் ஆட்டம் (காட்சி) படம் பார்த்துவிட்டு நடந்து வந்து கொண்டிருந்தார்கள். பாலுவின் சட்டைப்பையில் ஆயிரம் ரூபாய் இருந்தது.

அப்போது வீதியில் நடமாட்டமே இல்லை. திடீரென ஒரு திருடன் அவர்கள் எதிரே வந்து கத்தியைக் காட்டி வாட்ச், பணம் அனைத்தையும் தரும்படி கேட்டான்.

உண்மையில் ராஜாவிடம் வெறும் பத்து ரூபாயே இருந்தது. ஆனால் பாலுவிடம் ஆயிரம் ரூபாய் இருந்தது. அவனின் குறுக்குப் புத்தி வேலை செய்தது. சட்டென ஆயிரம் ரூபாயை சட்டைப் பையிலிருந்து எடுத்து ராஜா இந்த உனக்குக் கொடுக்க வேண்டிய ஆயிரம் ரூபாய். பெற்றுக் கொள். உனக்குக் கொடுக்க வேண்டிய கடனை இதோ அடைத்து விட்டேன் என்று சொல்லி அப்பணத்தை ராஜாவின் கைகளில் வலுக்கட்டாயமாக திணித்து விட்டான். திருடனும் ராஜா கையிலிருந்து பணத்தைப் பிடுங்கிக் கொண்டு ஓடிவிட்டான்.

அப்பாடி பிழைத்தோம். எப்படியும் திருடன் நம்மிடமிருந்து ஆயிரம் ரூபாயைப் பறித்துச் சென்றிருப்பான். நமக்கு நஷ்டமாகியிருக்கும் நல்ல வேளை பணத்தை ராஜாவிடம் கொடுத்ததன் மூலம் நமது கடனும் தீர்ந்தது. ராஜாவின் பணம்தானே திருட்டுப் போயிற்று. நமக்கொன்றும் நஷ்டமில்லையே நம் புத்தி சமயோசிதமாய் யோசித்தது. சபாஷ்டா பாலு என்று தன்னை தானே புகழ்ந்து கொண்டான் கெட்ட புத்திக்காரன் பாலு.

பாலுவின் மோசமான புத்தி ராஜாவுக்குப் புரிந்து போயிற்று. அடிக்கடி மனைவி சொன்ன சொற்கள் நினைவுக்கு வந்தன.

சீ.. நீயெல்லம் ஒரு நண்பனா? உன் புத்தி புரிந்தது. உன்னைப் போல் ஒரு கேவலமான நண்பன் இனி எனக்குத் தேவை இல்லை. ஆயிரம் ரூபாயை இழந்ததன் மூலம் எனக்கு நல்ல பாடம் கிடைத்தது. உன் பொய்யான நட்பு எனக்குத் தேவையில்லை என்று சொல்லி வேகமாக வீடு வந்து சேர்ந்தான் ராஜா.

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுயமரியாதையின் விழிப்புணர்வு நம்மிடம் இருக்கும்போதே மற்றவரிடமும் அதை உணர முடியும். – அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கௌரவத்தைக் காப்பாற்ற வேண்டும்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எங்கள் தமிழ் மக்களின் அடையாளம்.

இந்த நாட்டில் நம் தமிழ் மக்கள் சந்திக்காத துயரங்கள் இல்லை. இழப்புகள் இல்லை. வஞ்சிப்புகள் இல்லை.

இருந்தும் அவர்கள் இழப்புகளைக் கடந்து, பேரழிவுகளைத் தாண்டி, தங்கள் வாழ்வியலைக் மீளக்கட்டியெழுப்பியுள்ளனர் எனும் போது; அதற்கு மூலகாரணமாக இருப்பது எங்கள் மக்களின் ஆத்ம பலமும் அறிவியல் பலமும் என்பதை நாம் மறந்துவிடலாகாது.

ஆம், எந்த இடர்கள் வந்துற்றபோதும் ஆலயங்களில் நித்திய பூசை நடக்க வேண்டும் என்பதில் நம்மவர்கள் கொண்டிருந்த பற்றுறுதியும் நாம் வசிக்கின்ற இல் இடத்தைப் புனரமைப்பதற்கு முன்னதாக, எங்கள் வழிபடு கடவுளின் ஆலயத்தைப் புனரமைக்க வேண்டும் என்ற எங்கள் சிந்தனையும் சாதாரணமானதல்ல.

தவிர, எங்கள் அறிவுப்புலம் என்பது எம் இனத்தின் பெரும் சொத்து.

ஆம், நாடு கடந்து புலம்பெயர்ந்து கொட்டும் பனியிலும் குளிரிலும் நனைந்து உழைத்த பணத்தில், தான் கற்ற பாடசாலையைப் புனரமைக்க வேண்டும் என்ற உணர்வு எங்களிடம் இருக்கும்வரை தமிழனை எவராலும் எதுவும் செய்துவிட முடியாது.

இங்குதான் தமிழர்களின் கல்விப் புலம் என்று நாம் கூறும்போது, எங்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தலைநிமிர்ந்து நிற்கிறது.

உண்மை. 50 ஆண்டுகளை நிறைவு செய்து பொன்விழாக் கண்ட பூரிப்பில் எங்கள் யாழ்ப்பாணப் பல்லைக்கழகத் தாய் மிடுக்கோடு நிற்கும்போது, அதன் பெருமையை – அதன் கௌரவத்தை எந்நாளும் காப்பாற்றுகின்ற பெரும் பொறுப்பு அனைத்துத் தமிழ் மக்களதும் தலையாய கடமையாகும்.

இருந்தும் யாழ். பல்கலைக்கழகத்தில் சம நேரத்தில் இடம்பெற்றுள்ள சிற்சில சம்பவங்கள் வேதனை தருவதாக உள்ளன.

இங்கு நடந்த சம்பவம் குறித்து குற்றம் சாட்டுவதென்பதற்கப்பால், வேண்டத்தகாத சம்பவங்கள் இடம்பெறாமல் பார்த்துக் கொள்வதற்கான ஏற்பாடுகள் பற்றிச் சிந்திப்பதுதான் பொருத்தம்.

எனவே அறிக்கைக் கலாசாரங்களை நீள விடாமல், மாணவர் – ஆசிரியர் என்ற மிக உன்னதமான உறவோடு, புரிந்துணர்வோடு நிலைமைகளைக் கையாள்வதுதான் புத்திசாலித்தனம்.

ஏனெனில் முன்பு ஒருபோதும் இல்லாதவாறு இம்முறை யாழ்.பல்கலைக்கழக மாணவர்களும் ஆசிரியர்களும் கன்னை பிரிந்து நிற்கின்ற துர்ப்பாக்கிய நிலைமை ஏற்பட்டுள்ளது. இஃது அவ்வளவு நல்லதல்ல.

ஆகையால் எங்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கௌரவத்தைக் காப்பாற்றும் பொருட்டு ஒரு சுமுகமான நிலைமையை அவசரமாகத் தோற்றுவிக்க வேண்டும்.

இது காலத்தின் தேவை.

## பேரவையின் கூட்டத்தீர்மானம் வாபஸ் பெறப்பட வேண்டும்

### யாழ்.பல்கலை ஆசிரியர் சங்கம் தீர்மானம்

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் விசேட பொதுக் குழுக்கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் குறித்த அறிக்கை ஒன்றை ஆசிரியர் சங்கம் வெளியிட்டுள்ளது. அதன் விபரம் வருமாறு, அண்மையில் இடம்பெற்ற யாழ்ப்பாணப் பல் கலைக்கழகத்தின் பேரவைக் கூட்டத்தின் பின்னர் பல்கலைக் கழகத்தின் கலைப்பீடாதிபதி தனது பதவியினை இராஜினாமா செய்தார். இராஜினாமாவினை அடுத்துப் பல்கலைக்கழகம் பற்றிய பல கருத்துக்கள் ஊடகங்களிலும், சமூக ஊடகங்களிலும் வெளியாகியிருந்தன. இந்த நிலையில் நிலைமை குறித்துக் கலந்துரையாடும் வகையில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக ஆசிரியர் சங்கத்தின் விசேட பொதுக்குழுக் கூட்டம் நேற்றுத் திங்கட்கிழமை காலை 10 மணியளவில் கலைப்பீடத்தில் இடம்பெற்றது.

மீறல்களிலும் வன்முறைகளிலும் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தினைப் பாதிக்கும் வகையிலும் உடைமைச் சேதங்களை விளைவிப்பதிலும் சீரழிவுமிக்க நடவடிக்கைகளிலும் ஈடுபடும் மாணவர்களிற்கு எதிராகப் பல்கலைக்கழகத்தின் நிர்வாகம் கடந்த காலத்தில் உறுதியான நடவடிக்கைகளை எடுக்கத்தவறியமை குறித்து இந்தக் கூட்டத்திலே பல உறுப்பினர்களும் தமது கருத்துக்களை வெளியிட்டனர். திட்டமிட்ட முறையில் விசாரணைகளில் தாமதங்கள் ஏற்படுத்தப்பட்டு, மாணவர்கள் சட்டத்தின் ஓட்டைகளைப் பயன்படுத்தி தண்டனைகளிலிருந்து தப்பித்துச் செல்ல நிர்வாகம் வழி சமைத்துக் கொடுப்பதான கருத்துக்கள் வெளியிடப்பட்டன. தண்டனைகளின் நோக்கம் மாணவர்களை விரோதிப்பது அல்ல, மாறாக தாம் செய்யும் தவறுகளை மாணவர்கள் உணர்ந்து எதிர்காலத்தில் செம்மையாகச் செயற்படும் வகையில் ஊக்குவிப்பதே என்பதுவும் இங்கு சுட்டிக் காட்டப்பட்டது.

கூட்டத்தின் இறுதியில் ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து நேற்றைய தினம் பல்கலைக்கழக ஆசிரியர்கள் ஓர் அடையாள வகுப்புப் புறக்கணிப்பில் ஈடுபடுவது எனவும் இன்று முதல் தொடர் வகுப்புப் புறக்கணிப்பில் ஈடுபடுவது எனவும் முடிவெடுக்கப்பட்டது.

1. மோசமான செயல்களிலே ஈடுபட்ட மாணவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என இராஜினாமாச் செய்த கலைப் பீடாதிபதி பேராசிரியர் ரகுராம் அவர்கள் முன்வைத்த கோரிக்கை உடனடியாக ஏற்றுக்கொள்ளப்படல் வேண்டும். பேராசிரியர் ரகுராம் தனது பதவி விலகலினை வாபஸ் பெற்று மீளவும் பீடாதிபதிப் பொறுப்பினை ஏற்பதற்கும் உரிய ஒரு சூழலினைப் பல்கலைக்கழக நிர்வாகம் பல்கலைக்கழகத்திலே ஏற்படுத்த வேண்டும்.

2. மாணவர்களுக்கு எதிரான ஒழுக்காற்று நடவடிக்கை தொடர்பாக அண்மையில் இடம்பெற்ற பேரவைக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் உடனடியாக வாபஸ் பெறப்படல் வேண்டும்.

3. மோசமான செயல்களிலே ஈடுபட்டமைக்கான ஆதாரங்கள் உறுதியாக இருக்கும் போதிலும், அவற்றினைப் பயன்படுத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் வேண்டுமென்றே கால தாமதங்களை ஏற்படுத்தல், வேண்டுமென்றே நிர்வாகத் தவறுகளை இழைத்தல் போன்ற செயன்முறைகள் மூலம் மீறல்களிலே ஈடுபட்ட மாணவர்கள் தண்டனையில் இருந்து தப்புவதற்கு நிர்வாகம் வழிசமைத்துக் கொடுக்கும் போக்கு உடனடியாக முடிவுக்குக்கொண்டுவரப்படல் வேண்டும்.

4. இரண்டு மாணவர்கள் கணித புள்ளிவிபரவியல் துறையின் வாயிலில் இருந்த பூட்டினை உடைத்தமை தொடர்பில் இடம்பெற்ற விசாரணையினை வேண்டுமென்றே தாமதமடையச் செய்த பல்கலைக் கழக நிர்வாகிகளுக்கு எதிராக விசாரணை மேற்கொள்ளப்படல் வேண்டும். அதே போன்று கலைப் பீடத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பான விசாரணைகளை வேண்டுமென்றே இழுத்தடிப்போர் மீதும் விசாரணைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். இது தொடர்பிலே பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் தலையீட்டினையும் கோருவதற்குப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் தீர்மானித்துள்ளது.

5. கலைப்பீடத்திலும் விஞ்ஞானப் பீடத்திலும் மோசமான செயல்களிலே ஈடுபட்ட மாணவர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் மேற்கொள்ளுவதில் இருந்து தவறிய பேரவையின் வெளிவாரி உறுப்பினர்களின் மீது எமது ஆசிரியர் சங்கம் நம்பிக்கையினை இழந்துள்ளது. எனவே எல்லா வெளிவாரி உறுப்பினர்களும் தமது பதவிகளை இராஜினாமா செய்ய வேண்டும். புதிய உறுப்பினர்கள் பேரவைக்கு நியமிக்கப்பட வேண்டும். இது தொடர்பான சங்கத்தின் விண்ணப்பம் ஒன்று பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கும் உயர் கல்வி அமைச்சுக்கும் அனுப்பி வைக்கப்படும்.

மேற்கூறிய ஐந்து கோரிக்கைகளையும் உள்ளடக்கிய கடிதம் ஒன்று பல்கலைக்கழகத்தின் துணைவேந்தருக்கும் சகல பீடாதிபதிகளுக்கும் ஆசிரியர் சங்கத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## மகிந்தவின் உடலத்தை பதப்படுத்திக் காக்க வேண்டும்

### மகிந்த உயிருடன் இருக்கும் போதே அவரது சகா கோரிக்கை

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இறந்த பின்னர் அவரின் உடல் பதப்படுத்தப்பட வேண்டும் என முன்னாள் பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ கோரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது,

மகிந்த ராஜபக்ஷ 30 ஆண்டுகாலப் போரை நிறைவுக்குக் கொண்டுவந்த ஒரு கொண்டாடப்பட வேண்டிய தலைவர்.

எனவே, எதிர்காலச் சந்ததியினர் மகிந்தவின் உடலைப் பார்க்க வேண்டும்.

இதற்காக அவரது சடலம், இறந்த ரஷ்யாவின் தலைவர் விளாடிமிர் லெனின் மற்றும் வியட்னாமின் புரட்சிப் போராளி ஹோ சின் மின்ஹ் ஆகியோரின் உடலங்கள் பதப்படுத்தப்பட்டது போன்று பதப்படுத்தப்பட்டு பாதுகாக்க வேண்டும் என்றார். (ம-7)

## ஆட்டைக் கடித்த குற்றத்துக்காக நாய்க்கு மரண தண்டனை

### கொடூரத்தை அரங்கேற்றிய சந்தேக நபருக்கு மறியல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு, மாங்குளம் பகுதியில் வளர்ப்பு ஆட்டைக் கடித்த அயல் வீட்டு நாய் ஒன்றை இணக்கசபை ஊடாகப் பெற்று தூக்கிட்டு கொடூரமாகக் கொன்ற சம்பவம் தொடர்பாக மாங்குளம் பகுதியைச் சேர்ந்த 48 வயதுடைய பெண் ஒருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க தெரிவித்தார்.

கழுத்தில் கயிற்றால் கொலைப்பட்டு கொடூரமாகக் கொல்லப்பட்ட நாயின் புகைப்படங்கள் சமூக வலைத்தளங்களில் வெளியானதைத் தொடர்ந்து பலரும் இந்தச் சம்பவத்திற்குக் கடும் அதிருப்தியை வெளிப்படுத்தினர்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ள மாங்குளம் பொலிஸார் சந்தேகநபரான பெண்ணைக் கைது செய்து விலங்குகள் வதைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியவேளை சந்தேகநபரை எதிர்வரும் 3ம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ம-7)

## மக்களின் இன்னல்களுக்கு சப்பைக் காரணம் கூறும் அரசு

### கண்டிக்கிறார் செஹான் சேமசிங்க

(கொழும்பு)

நாட்டு மக்கள் எதிர்கொண்டுள்ள அடிப்படைப் பிரச்சினைகள் தொடர்பில் அரசாங்கம் குறிப்பிடும் காரணிகள் மூர்க்கத்தனமானவை என முன்னாள் நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

அநுராதபுரம் பகுதியில் நேற்றுத் திங்கட்கிழமை (27) நடைபெற்ற மக்கள் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் வீட்டில் தேங்காய்ச் சம்பல் செய்வதாலும் உணவுக்குத் தேங்காய் பயன்படுத்துவதாலும் தேங்காய்க்குத் தட்டுப்பாடு என்று பிரதி அமைச்சர் குறிப்பிடுகிறார்.

காட்டு விலங்குகளினால் விவசாயப் பயிர்கள் நாசமடைகிறது. அதனால் அரிசி உள்ளிட்ட உணவுப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக விவசாயத்துறை அமைச்சர் குறிப்பிடுகிறார்.

இவை ஒரு நியாயமான பதிலா? கடந்த காலங்களில் வீடுகளில் தேங்காய் உணவுக்குப் பயன்படுத்தவில்லையா?, காட்டு விலங்குகள் வாழவில்லையா? என்றும் அவர் கேள்வியெழுப்பினார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நடக்கவிருக்கும் உள்ளூராட்சி சபைத்தேர்தலில் போட்டியிட இருக்கும் இளம் சமூகத்தினருக்கான தெளிவூட்டல் - பகுதி - II

09

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம். தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

**பூநகரி பிரதேச சபைத் தேர்தல் – 2018**
**கட்சிகள் பெற்ற உறுப்பினர்கள் எண்ணிக்கை**

| | |
|---|---|
| உள்ளூராட்சி சபை | பூநகரி பிரதேச சபை |
| வட்டாரங்களின் எண்ணிக்கை | தனி- 11 பல் – 0 |
| வட்டார உறுப்பினர்கள் எண்ணிக்கை | 11 |
| சபைக்குரிய மொத்த உறுப்பினர்கள் | 20 |

| அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி அல்லது சுயேச்சைக் குழு | பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கை | சதவீதம் | பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கைக்கு உரிய உறுப்பினர்கள் எண்ணிக்கை | வட்டாரங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் எண்ணிக்கை | மேலதிக பட்டியலில் இருந்து நியமிக்கப்பட வேண்டிய உறுப்பினர்கள் எண்ணிக்கை | மேன்மிகை உறுப்பினர்கள் எண்ணிக்கை (Over Hang)* |
|---|---|---|---|---|---|---|
| இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி | 5,807 | 48.93% | 9 | 11 | - | 2 |
| சுயேச்சைக் குழு | 2,429 | 20.47% | 4 | - | 4 | - |
| ஐக்கிய தேசியக் கட்சி | 1,260 | 10.62% | 2 | - | 2 | - |
| ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி | 945 | 7.96% | 2 | - | 2 | - |
| ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி | 871 | 7.34% | 1 | - | 1 | - |
| அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் | 265 | 2.23% | - | - | - | - |
| தமிழர் விடுதலைக் கூட்டணி | 181 | 1.52% | - | - | - | - |
| லங்கா சமசமாஜக் கட்சி | 111 | 0.94% | - | - | - | - |
| மொத்தம் | 11,869 | 100% | 18 | 11 | 9 | 2 |

| | |
|---|---|
| செல்லுபடியான மொத்த வாக்குகளின் எண்ணிக்கை | 11,869 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை | 194 |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளின் எண்ணிக்கை | 12,063 |
| பதிவுசெய்யப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை | 15,199 |

**பூநகரி பிரதேச சபைத் தேர்தல் – 2018**

| வட்டார இலக்கம் | வட்டார பெயர் | உள்ளடக்கப் பிரதேசம் (கிராம அலுவலர் பிரிவுகள்) | வெற்றி பெற்ற கட்சி | பெற்ற வாக்குகள் |
|---|---|---|---|---|
| 1 | கௌதாரிமுனை | KN 67, KN 68 | ITAK | 314 |
| 2 | ஞானிமடம் | KN 62, KN 63, KN 66 | ITAK | 588 |
| 3 | பள்ளிக்குடா | KN 65 | ITAK | 714 |
| 4 | கொல்லகுறிச்சி | KN 61, KN 64 | ITAK | 283 |
| 5 | தல்லூர் | KN 59, KN 60 | ITAK | 659 |
| 6 | ஜெயபுரம் | KN 69, KN 70 | ITAK | 328 |
| 7 | பொன்னாவெளி | KN 75, KN 76 (அடுத்துள்ள தீவுகளுடன்) | ITAK | 962 |
| 8 | இரணைதீவு | KN 74, KN 77 | ITAK | 411 |
| 9 | பல்லவராயன்கட்டு | KN 72 | ITAK | 289 |
| 10 | கரியாலை நாகபடுவான் | KN 71 | ITAK | 298 |
| 11 | முழங்காவில் | KN 73 | ITAK | 961 |

2018ஆம் ஆண்டு பிரதேச சபைத் தேர்தலுக்குப் பதிவு செய்யப்பட்ட வாக்காளர் எண்ணிக்கை 15 199 ஆகும்.

இத் தேர்தலில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி (ITAK), சுயேச்சைக் குழு(IND), அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் (TC), ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி (SLFP), ஐக்கிய தேசியக் கட்சி (UNP), ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (EPDP), தமிழர் விடுதலைக் கூட்டணி (TULF), மற்றும் லங்கா சமசமாஜக் கட்சி ஆகியன போட்டியிட்டன.

## 2018 ஆம் ஆண்டு உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் - மன்னார் மாவட்டம்

### 01. மன்னார் நகர சபை

மன்னார் நகர சபையில் மொத்தமாக 15 கிராம அலுவலர் பிரிவுகளின் பிரதேசங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இந் நகர சபை 7 வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளதோடு அவற்றில் ஐந்து தனி உறுப்பினர் வட்டாரங்களும் இரண்டு இரட்டை உறுப்பினர்கள் வட்டாரங்களும் ஆகும். வட்டாரங்களிலிருந்து தெரிவு செய்யப்படும் உறுப்பினர்கள் எண்ணிக்கை 9 ஆகும்.

மன்னார் நகர சபையின் விஸ்தீரணம் கிட்டத்தட்ட 15.10 சதுர கிலோ மீற்றர்கள் ஆகும். 2020 ஆம் ஆண்டுச் சனத் தொகை கிட்டத்தட்ட 18 679 பேர். 2018ஆம் ஆண்டு நகர சபைத்தேர்தலுக்கு பதிவு செய்யப்பட்ட வாக்காளர் எண்ணிக்கை 14 770 ஆகும்.

இத் தேர்தலில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி (ITAK), அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் (TC), ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி (SLFP), ஐக்கிய தேசியக் கட்சி (UNP), ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (EPDP), தமிழர் விடுதலைக் கூட்டணி (TULF), ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன (SLPP), ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் (SLMC) மற்றும் தேசிய காங்கிரஸ் (NC) ஆகியன போட்டியிட்டன.

### 02. மன்னார் பிரதேச சபை

மன்னார் பிரதேச சபையில் மொத்தமாக 34 கிராம அலுவலர் பிரிவுகளின் பிரதேசங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இப் பிரதேச சபை 11 வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளதோடு அவற்றில் பத்து தனி உறுப்பினர் வட்டாரங்களும் ஒன்று இரட்டை உறுப்பினர்கள் வட்டாரமும் ஆகும். வட்டாரங்களிலிருந்து தெரிவு செய்யப்படும் உறுப்பினர்கள் எண்ணிக்கை 12 ஆகும்.

மன்னார் பிரதேச சபையின் விஸ்தீரணம் கிட்டத்தட்ட 203.23 சதுர கிலோமீற்றர்கள் ஆகும். 2020ஆம் ஆண்டுச் சனத் தொகை கிட்டத்தட்ட 38739 பேர். 2018ஆம் ஆண்டு பிரதேச சபைத் தேர்தலுக்கு பதிவு செய்யப்பட்ட வாக்காளர் எண்ணிக்கை 22 468 ஆகும்.

(தொடரும்...)

**மன்னார் நகர சபைத் தேர்தல் – 2018**
**கட்சிகள் பெற்ற உறுப்பினர்கள் எண்ணிக்கை**

| | |
|---|---|
| உள்ளூராட்சி சபை | மன்னார் நகர சபை |
| வட்டாரங்களின் எண்ணிக்கை | தனி- 5 பல் – 2 |
| வட்டார உறுப்பினர்கள் எண்ணிக்கை | 9 |
| சபைக்குரிய மொத்த உறுப்பினர்கள் | 16 |

| அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி அல்லது சுயேச்சைக் குழு | பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கை | சதவீதம் | பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கைக்கு உரிய உறுப்பினர்கள் எண்ணிக்கை | வட்டாரங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் எண்ணிக்கை | மேலதிக பட்டியலில் இருந்து நியமிக்கப்பட வேண்டிய உறுப்பினர்கள் எண்ணிக்கை | மேன்மிகை உறுப்பினர்கள் எண்ணிக்கை (Over Hang)* |
|---|---|---|---|---|---|---|
| இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி | 4,355 | 37.36% | 6 | 7 | - | 1 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 3,424 | 29.37% | 4 | 2 | 2 | - |
| தமிழர் விடுதலைக் கூட்டணி | 1,231 | 10.56% | 2 | - | 2 | - |
| ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி | 903 | 7.75% | 1 | - | 1 | - |
| ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி | 409 | 3.51% | 1 | - | 1 | - |
| ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன | 395 | 3.39% | 1 | - | 1 | - |
| அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் | 348 | 2.99% | - | - | - | - |
| தேசிய காங்கிரஸ் | 302 | 2.59% | - | - | - | - |
| ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் | 291 | 2.50% | - | - | - | - |
| மொத்தம் | 11,658 | 100% | 15 | 9 | 7 | 1 |

| | |
|---|---|
| செல்லுபடியான மொத்த வாக்குகளின் எண்ணிக்கை | 11,658 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை | 98 |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளின் எண்ணிக்கை | 11,756 |
| பதிவுசெய்யப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை | 14,770 |

**மன்னார் நகர சபைத் தேர்தல் – 2018**

| வட்டார இலக்கம் | வட்டார பெயர் | உள்ளடக்கப் பிரதேசம் (கிராம அலுவலர் பிரிவுகள்) | வெற்றி பெற்ற கட்சி | பெற்ற வாக்குகள் |
|---|---|---|---|---|
| 1 | எழுத்தூர் (இரு உறுப்பினர்) | MN 71, MN 72 | ITAK | 1229 |
| 2 | சாவற்கட்டு | MN 75, MN 78 | ITAK | 847 |
| 3 | சவுத்பார் | MN 73, MN 74 | ITAK | 595 |
| 4 | பனங்கட்டிகோட்டு | MN 76, MN 77 | ITAK | 409 |
| 5 | கோட்டை | MN 79, MN 80 | ITAK | 219 |
| 6 | உப்புக்குளம் (இரு உறுப்பினர்) | MN 81, MN 82, MN 83 | UNP | 1107 |
| 7 | பள்ளிமுனை | MN 84, MN 85 | ITAK | 544 |

**மன்னார் பிரதேச சபைத் தேர்தல் – 2018**
**கட்சிகள் பெற்ற உறுப்பினர்கள் எண்ணிக்கை**

| | |
|---|---|
| உள்ளூராட்சி சபை | மன்னார் பிரதேச சபை |
| வட்டாரங்களின் எண்ணிக்கை | தனி- 10 பல் – 1 |
| வட்டார உறுப்பினர்கள் எண்ணிக்கை | 12 |
| சபைக்குரிய மொத்த உறுப்பினர்கள் | 21 |

| அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி அல்லது சுயேச்சைக் குழு | பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கை | சதவீதம் | பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கைக்கு உரிய உறுப்பினர்கள் எண்ணிக்கை | வட்டாரங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் எண்ணிக்கை | மேலதிக பட்டியலில் இருந்து நியமிக்கப்பட வேண்டிய உறுப்பினர்கள் எண்ணிக்கை | மேன்மிகை உறுப்பினர்கள் எண்ணிக்கை (Over Hang)* |
|---|---|---|---|---|---|---|
| ஐக்கிய தேசியக் கட்சி | 5,864 | 33.05% | 7 | 4 | 3 | - |
| இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி | 5,029 | 28.25% | 6 | 7 | - | 1 |
| ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | 1,995 | 11.21% | 2 | 1 | 1 | - |
| ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி | 1,517 | 8.52% | 2 | - | 2 | - |
| ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன | 1,229 | 6.90% | 1 | - | 1 | - |
| தமிழர் விடுதலைக் கூட்டணி | 1,118 | 6.28% | 1 | - | 1 | - |
| ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி | 624 | 3.51% | 1 | - | 1 | - |
| அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் | 406 | 2.28% | - | - | - | - |
| மொத்தம் | 17,802 | 100% | 20 | 12 | 9 | 1 |

| | |
|---|---|
| செல்லுபடியான மொத்த வாக்குகளின் எண்ணிக்கை | 17,802 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை | 124 |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளின் எண்ணிக்கை | 17,926 |
| பதிவுசெய்யப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை | 22,468 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கில்...

யாழ்.பல்கலைக்கழகத்தின் புவியியல் துறையின் தலைவர் நாகமுத்து பிரதீப ராஜா தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக முன்னரே குறிப்பிட்டபடி இன்று முதல் எதிர்வரும் பெப்ரவரி 03ஆம் திகதி வரை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் மிதமானது முதல் கனமானது வரை மழை கிடைக்கும் வாய்ப்புள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், ஒரு சில பகுதிகளுக்கு மிகக் கனமழை கிடைக்கும் வாய்ப்புள்ளது.

அதேவேளை எதிர்வரும் பெப்ரவரி 02ஆம் திகதி முதல் வடக்கு மாகாணத்தில் மழை படிப்படியாகக் குறைவடையும். கிழக்கு மாகாணத்தில் எதிர்வரும் பெப்ரவரி 04ஆம் திகதி முதல் மழை படிப்படியாகக் குறைவடையும் என்றார். (ம-7)

## தமிழ்த் தேசியக்...

அழைப்புக் கிடைக்கவில்லை எனத் தெரிவித்தது.

அதனையடுத்து கடந்த சில தினங்களுக்கு முன்னர் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் கட்சியின் செயலாளரான முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் ஆகியோர் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவரும் வடமாகாண சபையின் அவைத் தலைவருமான சி.வி.கே.சிவஞானத்தின் வீட்டிற்கு நேரில் சென்று கலந்துரையாடலுக்கு அழைப்பு விடுத்திருந்த நிலையில், நேற்றுத் திங்கட்கிழமை கலந்துரையாடலுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில் நேற்றுத் திங்கட்கிழமை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தை தொலைபேசியில் தொடர்பு கொண்ட தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே சிவஞானம் தமது கட்சி சார்பில் இன்றைய (நேற்று) கலந்துரையாடலில் கலந்து கொள்ள முடியாது எனவும், எதிர்வரும் 08ஆம் திகதி தமிழரசின் மத்திய செயற்குழுக் கூட்டம் நடைபெறவுள்ளதால், கலந்துரையாடல் தொடர்பில் கூட்டத்தில் முடிவெடுத்து, அதன் பிரகாரம் எமது கட்சியின் நிலைப்பாட்டைத் தெரிவிக்க முடியும் எனக் கூறியுள்ளார்.

இது தொடர்பில் கலந்துரையாடலுக்கு சமூகமளிக்க இருந்த பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், சிவஞானம் சிறீதரன் ஆகியோருக்கு கஜேந்திரகுமார் தெரிவித்ததை அடுத்து, 08ஆம் திகதி தமிழரசுக் கட்சி தனது முடிவினை அறிவித்த பின்னர், கலந்துரையாடலை மேற்கொள்வோம் எனக் கூறியுள்ளதால், நேற்று நடைபெறவிருந்த கலந்துரையாடல் பிற்போடப்பட்டுள்ளது.(ம-7)

## அரசியலமைப்பை...

பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள பிவிதுரு ஹெல உறுமய கட்சிக் காரியாலயத்தில் நேற்றுத் திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் அரசியலமைப்பை அறியாவிடினும் நீதியரசர் (ஓய்வு நிலை) அரசியலமைப்பையும், சட்டங்களையும் நன்கு அறிவார். ஆகவே தேர்தல் மேடைகளில் குறிப்பிட்டதைப்போன்று முன்னாள் ஜனாதிபதிகளின் ஓய்வூதியக் கொடுப்பனவை இரத்துச் செய்ய முடியாது என்பதை அரசாங்கத்துக்கு தெளிவாகக் குறிப்பிட்டிருப்பார்.

முன்னாள் ஜனாதிபதிகளின் ஓய்வூதியக் கொடுப்பனவை இரத்துச் செய்வதாக தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. அவ்வாறாயின் இவர்கள் அரசியலமைப்பின் 36(2) உறுப்புரையை அறியவில்லை என்பதையே எடுத்துக்காட்டுகிறது.

இந்த வாக்குறுதியை மறக்கடிக்கச் செய்வதற்காகவே ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க முன்னாள் ஜனாதிபதிகளை அரச உத்தியோகபூர்வ இல்லத்திலிருந்து வெளியேற்றுவதாகக் குறிப்பிட்டுக் கொள்கிறார்.

மேலும், மக்களுக்குப் பொய்யான வாக்குறுதியை வழங்கி அரசாங்கம் அரசியலமைப்பை மீறியுள்ளது என்றார். (ம-7)

## அனைத்துக்...

கெக்கிராவையில் நேற்று முன்தினம் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் உரையாற்றுகையில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

அரசியலில் இடம்பெறும் மோசடிகளைத் தடுத்து நிறுத்துமாறு மக்கள் கோரி வந்தனர்.

அதற்கான நடவடிக்கை தற்போது எடுக்கப்பட்டு வருகிறது. எமக்கு விசாரணை செய்யும் அதிகாரம் கிடையாது. அவற்றுக்காகக் கட்டமைக்கப்பட்ட நிறுவனங்கள் உள்ளன. அவை விசாரணைகளை முன்னெடுக்கும்.

சட்டமா அதிபர் திணைக்களம் அவர்களுக்கு எதிராக வழக்குத் தொடரும். இந்த நிறுவனங்களைப் பலப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுக்கும். மறைக்கப்பட்ட வழக்கு மீள விசாரிக்கப்படுகின்றன.

முறையாக விசாரிக்கப்பட்டு முறையாக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு குற்றமிழைத்த அனைவருக்கும் எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். (ம-7)

## யோஷித...

வழக்குத் தொடரப்படும் எனவும் நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார நேற்றுத் தெரிவித்துள்ளார்.

யோஷிதவிற்கு பிணை வழங்குவதனால் அவர் குற்றமற்றவர் என்று அர்த்தமில்லை எனவும் பிணைமுறி சட்டத்தின் விதிகளின் பிரகாரம் அவருக்குப் பிணை வழங்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கடந்த அரசாங்கங்களைப் போன்று அரசாங்கம் செயற்படுவதாகவும், யோஷித விடயத்தில் சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் பொதுப் பாதுகாப்பு அமைச்சர் தொடர்பில் சந்தேகம் எழுப்பப்படுவதாகவும் சிலர் நம்பவைக்க முயற்சிப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

"இந்தச் சந்தேகங்கள் அனைத்தும் மேல் நீதிமன்றத்தில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டவுடன் இன்னும் ஒரு மாதத்தில் நிவர்த்தி செய்யப்படும்," என்றார்.

இந்தச் சம்பவம் எட்டு ஆண்டுகளுக்கு முன்பு நடந்ததாகவும், எனினும் அரசியல் காரணங்களுக்காக இந்த வழக்கில் சந்தேகநபராக அவர் பெயரிடப்படவில்லை என்றும் அவர் கூறினார்.

மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்வதற்கு முன் சந்தேகநபரிடம் இருந்து வாக்கு மூலம் பதிவு செய்வது அவசியம் என அவர் மேலும் கூறினார். (ம-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127






































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-2147)

**076 825 7716** (ஆகாஸ்)



**வேலைக்கு ஆட்கள் தேவை**

A/L பரீட்சைக்கு தோற்றிய, 21 வயதிற்கு மேற்பட்ட, சாரதி அனுமதிப்பத்திரம் உள்ள

- விற்பனைப் பிரதிநிதி (sales man)
- விற்பனைப் பிரதிநிதி உதவியாளர் (merchandiser)

தேவை.

தொடர்புகளுக்கு:

**077 367 7613, 077 611 0185** (3246)


## வடக்கு...

களுக்குத் தீர்வு வழங்கப்படும் என அமைச்சர் பிமல் ரத்நாயக்க உறுதியளித்தார்.

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்ட அவர் நேற்று முன்தினம் செய்தியாளர் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு இதனைக் குறிப்பிட்டார். அதற்கமைய, எதிர்வரும் 31 ஆம் திகதி ஜனாதிபதி யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார் எனவும், அன்றையதினம் யாழ்ப்பாணம் மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்திலும் ஜனாதிபதி பங்கேற்பார் எனவும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வடக்கு மாகாண மக்கள் தங்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்குவதற்காகத் தேசிய மக்கள் சக்தியைத் தெரிவு செய்தமைக்கு மதிப்பளிக்கும் வகையில் ஜனாதிபதியின் இந்த விஜயம் அமைகின்றது என்றார். (ம-7)


**V2 VISA SERVICES**
**கனடா**

077 77 20 322
077 77 19 322

Visit Visas
Air Tickets

• கனடா PASSPORT APPOINMENTS

**விமான பயணச்சீட்டுக்கள்**

• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance

Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு (C-2146)



யாழ்ப்பாணம் - சென்னை
விமான சேவைகள்

யாழ் - சென்னை விமானப் பயணச் சீட்டுக்கள்
விசேட விலையில்
எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
மற்றும் அனைத்து நாடுகளுக்குமான
ரிக்கற்றுக்களை எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். (788)

**APEX TRAVELS**

**0777 597 598, 076 3333 644**

இல.105/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். CTB பஸ் தரிப்பிடத்திற்கு அருகில்)



**தரம் 6 - O/L**

ஆங்கில, தமிழ் மொழி மூலம்

GROUP CLASSES

**NEWTON**
NALLUR

**077 792 3653** (3230)



**முழுநேர / பகுதிநேர வேலைவாய்ப்பு**

இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் யாழ்.கிளைக்கு ஆலோசகர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

அடிப்படைத் தகைமைகள்

✓ G.C.E (O/L) பரீட்சையில் கணிதம், தமிழ் உட்பட 6 பாடங்களில் சித்தி.
✓ 18 - 60 வயதுக்குட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும். (3208)

தொலைபேசி இலக்கம் உள்ளடங்கலாக சுயவிபரக் கோவையை (BIO DATA) கீழ்வரும் Whatsapp இலக்கத்துக்கு அல்லது மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

Whatsapp: **077 756 3781**

jenyjude77@yahoo.com



யா/ மானிப்பாய் இந்துக் கல்லூரி
(தேசிய பாடசாலை)

**தரம் - 6 அனுமதி - 2025**
(தமிழ், ஆங்கில மொழி மூலம்)

யா/ மானிப்பாய் இந்துக் கல்லூரியில் 2025 ஆம் ஆண்டின் தரம் 06 மாணவர்களிற்கான அனுமதி கோரப்பட்டுள்ளது. விண்ணப்பப்படிவத்தினை இன்று முதல் அலுவலக நேரத்தில் பெற்று தை 31 ஆம் திகதிக்கு முன்னர் பூரணப்படுத்தி சமர்ப்பிக்கவும்.

குறிப்பு
- விசேட திறமையுள்ள மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கப்படும்.
- தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 139 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களுக்கு புலமைப்பரிசில்கள் வழங்கப்படும். (3244)

அதிபர்.
யா/ மானிப்பாய் இந்துக் கல்லூரி 021 225 5658



**விற்பனைக்கு**

மகேந்திரா மக்சிமோ ரக வாகனம் உடன் விற்பனைக்குண்டு. (3240)

**077 436 6704**
**075 164 0104**



**மணமகன் தேவை**

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1979 ம் ஆண்டு கார்த்திகை நட்சத்திரம் மேஷ ராசியில் பிறந்த மணமகளுக்கு பொருத்தமான மணமகனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். (3248)

**077 413 4528**


## மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1947 - 05 - 30 | 2025 - 01 - 27 |

### திருமதி சச்சிதானந்தன் கமலாதேவி

இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சச்சிதானந்தன் கமலாதேவி அவர்கள் நேற்று (27.01.2025) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - செல்லாபரணம் தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சச்சிதானந்தன் (கே.எஸ்.ஆனந்தன்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான திருமதி மயில்வாகனம் தங்கராசம், திருமதி நாகலிங்கம் ஆயிலியம் மற்றும் செல்வி பூமணி (ஓய்வுநிலை ஆசிரியர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம், நாகலிங்கம், காசிநாதர், கௌசலாதேவி மற்றும் நித்தியானந்தம், விவேகானந்தன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் வைதேகி, அபிராமி ஆகியோரின் அன்புத் தாயாரும் சுபநாதன், தயாபரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் ராஜகுலசூரியர், தர்மகுலசூரியர், நிவேதா உதயராஜன், நிரஞ்சன் நாகலிங்கம், நித்தியா சிவலிங்கம், நிரூபா சிவபாலன், நிர்மலன் நாகலிங்கம் ஆகியோரின் அன்புச் சின்னம்மாவும் அர்ஜன், சகானா, ஆரூரன், சாகித்தியன், அபிமன்யு, சாவித்திரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.01.2025) செவ்வாய்க்கிழமை காலை 08.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

சிவகாமி அம்மன் கோவிலடி,
இணுவில் கிழக்கு, இணுவில்.
077 844 8763
077 240 2370 (3243)

தகவல்:
குடும்பத்தினர்


**விசேட சலுகைகள்**

வெளிநாடுகளுக்கான பொதிகளுக்கு
மிகக் குறைந்த கட்டணத்தில்
25 Kg மேற்பட்ட பொதிகளுக்கு
- London 1350/=
- Germany 1850/=
- France 1750/=

மற்றைய நாடுகளுக்கு விசேட சலுகைகள்

Thirumurugan ComNet
321, K.K.S Rd, Jaffna.
077 755 4528 (3247)



**விசாக்கான (Show money)**

வங்கி இருப்பு உறுதிப்படுத்தி தரப்படும்.

குறைந்த சதவீதத்தில்%
•Visit visa
•Student visa
•Fixed & saving

சகல நாடுகளுக்குமான விசா சேவைகள்
தொடர்புகளுக்கு: (531)

**075 033 6759**



X MARD

கோப்பாய், மருதனார்மட கிளைகளில்
இதே விலைகளில் பொருட்களை கொள்வனவு செய்ய முடியும்.

| | | | |
|---|---|---|---|
| Rs. 219.00 Bulk Max 2kg வெள்ளைச் சீனி | Rs. 159.00 Bulk Max 2kg கோதுமை மா | Rs. 389.00 மஞ்சள் பருப்பு | Rs. 749.00 Bulk செத்தல் மிளகாய் |
| Rs. 979.00 Max 1PCS Anchor 400g | Rs. 289.00 Bulk ரவை | Rs. 49.00 ~~80~~ Anchor Yoghurt | Rs. 1749.00 Max 1PCS ~~2100~~ Protinex |
| Rs. 339.00 ~~425~~ Vim Liquid | Rs. 2499.00 ~~3000~~ Vitagen Vannila | Rs. 339.00 ~~380~~ Sunlight Powder Rose | Rs. 1129.00 ~~1190~~ Anchor Plus |
| Rs. 139.00 ~~175~~ Santoor Soap | Rs. 399.00 ~~480~~ Chick Shampoo | Rs. 2999.00 ~~3335~~ Diabeta Plus | Rs. 349.00 ~~500~~ Ocean Star Mackerel |
| Rs. 919.00 5kg ~~1150~~ Prima Wheat Flour | Rs. 3349.00 Max 1PCS ~~3800~~ Sustagen 400g | Rs. 149.00 ~~200~~ Noodles | Rs. 349.00 ~~400~~ Pepsi 1.5L |
| Rs. 199.00 ~~270~~ Fems 10 Pcs Pads | Rs. 799.00 ~~1200~~ Marvel 16 Pcs | Rs. 459.00 ~~695~~ Cute Baby Wipes | Rs. 2699.00 ~~3000~~ Vijitha 10Kg |

மானிப்பாய் வீதி, கோப்பாய் வடக்கு, கோப்பாய்.
(கோப்பாய் பிரதேச வைத்தியசாலைக்கு அருகாமையில்)
**074 2327 545**

மருதனார்மடம் (யாழ். இராமநாதன் கல்லூரிக்கு முன்பாகவும், வட இலங்கை சங்கீத சபைக்கு அருகிலும்)
**074 1011 345** (C-2148)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.01.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org